# கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மையநிலையும், முதன்மைநிலையும்

## I. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மையநிலையும், முதன்மைநிலையும்

T.Austin-Sparks

*வேத வாசிப்பு : கொலோ. 1:9-29; எபி; 1:1-14: 1 நாளா. 28:1-21; கொலே. 1:18; எபே. 1:15-23; பிலி. 2:5—11; கொலோ. 1:13; 2:10, 15*

இப்போது என் இருதயத்தில் இருப்பதை பதின்மூன்றாம் வசனத்திலுள்ள ஒரு சிறிய சொற்றொடர்மூலம் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்: "அவருடைய அன்பின் குமாரன்." பின்பு அதைத் தொடர்ந்து, பிதாவின் சித்தப்படி அவர் வகிக்கிற இடம் வருகிறது: "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், அவருக்குள் எல்லாம் நிலை நிற்கிறது," மற்றும் "அவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார்." கடைசியாக, "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்." இந்த எண்ணங்களையெல்லாம், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மையநிலையும், முதன்மை நிலையும்" என்ற ஒரு சொற்றொடரில் சுருக்கமாகச் சொல்லிவிடலாம் என்று நான் நினைக்கிறேன். இப்போது மட்டும் அல்ல, நம் வாழ்நாள் முழுவதும் நம் எண்ணங்களை முழுமையாக நிரப்ப (ஆட்கொள்ள) இந்த வார்த்தைகள் போதும்.

தேவனுடைய வார்த்தையின்படி, தேவன் தம் அன்பின் குமாரனைப்பற்றிய தம் நோக்கத்தையும் எண்ணத்தையும், குறைந்தபட்சம், நான்கு மண்டலங்களில் நிறைவேற்றப்போகிறார். முதலாவது, விசுவாசியின் தனிப்பட்ட வாழ்க்கை என்ற மண்டலம். இரண்டாவது, அவருடைய சரீரமாகிய சபை என்ற மண்டலம். மூன்றாவது, இந்த உலகத்தின் இராஜ்ஜியங்கள் என்ற மண்டலம், அதாவது பூமியின் தேசங்கள். நான்காவது, முழுப் *பிரபஞ்சத்திலும்*—வானத்திலும், பூமியிலும், பூமியின்கீழும்—அவர் மையமாகவும், முதன்மையாகவும் இருக்க வேண்டும்.

### எல்லா வேதவாக்கியங்களுக்கும் திறவுகோல்

இயேசு உயிர்த்தெழுந்தபிறகு, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (லூக்கா 24:27). நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது——எந்தப் பகுதியை வாசித்தாலும் சரி——"இந்தப் பகுதிக்கும் கிறிஸ்துவுக்கும் என்ன சம்பந்தம்?" என்ற கேள்வி எப்போதும் நம் மனதில் இருக்க வேண்டும். வாசிக்கும்போது, இந்தக் கேள்வியைக் கேட்டால், தேவனுடைய வார்த்தையை நாம் புதிய முறையில் புரிந்துகொள்ள ஆரம்பிப்போம்; நாம் வாசிப்பதற்கு ஒரு புதிய மதிப்பு வந்து விடும். ஏனென்றால், வேதவாக்கியங்கள்—*எல்லா* வேதவாக்கியங்களும்—அவரைப்பற்றியே சாட்சி கூறுகின்றன. சில சமயங்களில், அங்கு அவரைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமாக இருக்கக்கூடும்; ஆனாலும், அவர் அங்கு இருக்கிறார்.

உங்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர வேண்டும் என்பதே எல்லா வேதப்பகுதிகளின் ஒட்டுமொத்த விளைவாகும். தேவனுடைய வார்த்தையை வெறும் வரலாறாக, கதையாக, தீர்க்கதரிசனமாக அல்லது கவிதையாக நீங்கள் வாசிக்கக் கூடாது. "இதற்கும் கிறிஸ்துவுக்கும் என்ன சம்பந்தம்?" என்ற கேள்வியை எப்போதும் கேட்டுக்கொண்டேயிருங்கள். அந்தக் கேள்விக்கு உங்களால் பதில் கொடுக்க முடிந்தால், நீங்கள் திறவுகோலைக் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்று பொருள். வேதத்தின் சில பகுதிகள் கடினமானவை என்று நீங்கள் ஒருவேளை நினைக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, நீதிமொழிகள் புத்தகத்தை முதன்முதலாகப் பார்க்கும்போது, அதற்கும் கிறிஸ்துவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாததுபோல் தோன்றக்கூடும். நீதிமொழிகளில் எங்கெல்லாம் "ஞானம்" என்ற வார்த்தையைப் பார்க்கிறீர்களோ, அந்த இடத்தில் அதற்குப்பதிலாக "கிறிஸ்து" அல்லது "கிறிஸ்துவை அறிதல்" என்ற வார்த்தைகளை வைத்துப் பாருங்கள். அப்போது அந்தப் புத்தகத்தின் அர்த்தமே மாறிவிடும்; அதற்குப் புதிய அர்த்தம் கிடைத்துவிடும். இப்படிச் செய்வது சரியே. ஏனென்றால், கிறிஸ்துவே "தேவனுடைய ஞானம்," நித்திய வார்த்தை.

கர்த்தராகிய இயேசுவின் மையநிலையைப்பற்றிய வெளிப்பாட்டை நாம் பார்க்க விரும்புகிறோம். தேவனுடைய பிரியத்தின்படி, நீங்கள் எங்கு பார்த்தாலும் சரி, அவரே இந்தப் பிரபஞ்சத்தின் எல்லாவற்றிற்கும் மையமாக இருக்கிறார்; அவரே அதின் விளக்கம், பொருள்.

### சுவிசேஷங்கள் எதற்காக?

கர்த்தராகிய இயேசு என்ற நபரையும், அவருடைய வாழ்க்கையையும், வேலையையும்பற்றி நீங்கள் வாசிக்கும்போதெல்லாம், இந்த நபரின் *அற்புதங்களைக்* காண, கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைத் தாண்டிச்செல்ல வேண்டும் என்ற ஒரு தெய்வீக வேட்கை உங்கள் இருதயத்தில் இருக்க வேண்டும். அவரைப் பார்ப்பதில் நீங்கள் ஒருபோதும் களைப்படைய மாட்டீர்கள். அவரைப் பார்த்து பிரமிப்புடன் நிற்கும்போது, அது உங்கள் தொடுவானத்தைப் பெரிதாக்கும், உங்கள் இருதயத்தை விசாலமாக்கும்.

அவர் எவ்வளவு அற்புதமானவர் என்பதைப் பார்ப்பதற்கு, நீங்கள் அதிக தூரம் போகவேண்டிய அவசியம் இல்லை. இயேசுவின் பிறப்பைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை வாசியுங்கள்—அற்புதங்கள் அங்கு இருக்கின்றன. அவருடைய விருத்த சேதனத்திலும், அவர் தேவாயலத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவதிலும், எருசலேமுக்குப் போவதிலும், ஞானஸ்நானம் பெறுவதிலும், அபிஷேகிக்கப்படுவதிலும், சோதிக்கப்படுவதிலும், போதிப்பதிலும், உருமாற்றம் அடைவதிலும், அவருடைய வேலைகளிலும், சிலுவைப்பாடுகளிலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் நீங்கள் ஆச்சரியமான உண்மையைக் காண்பீர்கள். அவர் பரமேறுவதிலும், ஆவியானவரை அனுப்புவதிலும், அவருடைய தற்போதைய நடவடிக்கையிலும், அவர் மீண்டும் வருவதிலும் அவரைப் பாருங்கள். இந்தச் "சம்பவங்களில்" எந்தச் சம்பவத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அது அர்த்தம் நிறைந்ததாக இருக்கிறது; அது நம் பிரபஞ்சத்தின் எல்லைகளைத் தாண்டிச் செல்கிறது; அதில் எல்லா யுகங்களும், நித்தியங்களும், மண்டலங்களும் அடங்கியிருக்கின்றன, அது அவை

களைத் தாண்டியும் செல்கிறது. இயேசு என்னவாக இருக்கிறாரோ அதைவிடப் பெரியவராக அவரைக் காட்ட நாம் முயற்சிசெய்யவில்லை. மாறாக, அவருடைய உண்மையான பரிமாணங்களைக் காண நாம் முயற்சிசெய்கிறோம். தங்களுடைய கிறிஸ்துவின் மேன்மையைப்பற்றிய ஒரு புதிய வெளிப்பாடும், தேவனுடைய அன்பின் குமாரனைப்பற்றிய ஒரு புதிய மதிப்பீடும் கர்த்தருடைய மக்களுக்குத் தேவைப்படுகிறது. அவர் எவ்வளவு வல்லமையான, கெம்பீரமான, மகிமையான, அற்புதமான குமாரன்! அதன்பின், "நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டிருக் கிறார்" என்பதை அவருடைய மக்கள் நினைவில்கொள்ள வேண்டும். இது நம்மை உயர்த்தும், விசாலமாக்கும்; ஆம், ஆனால் இது அதைவிட இன்னும் அதிமான காரியங்களைச் சாதிக்கும்.

## II. தனிப்பட்ட விசுவாசிக்குக் கிறிஸ்துவின் மையநிலையும், முதன்மைநிலையும்

### விசுவாசியின் வாழ்க்கையில் கிறிஸ்து மையமும், முதன்மையுமாய் உள்ளார்

"கிறிஸ்து உங்களில் இருக்கிறார்; நீங்கள் அவருடைய மகிமையில் பங்கடை வீர்கள் என்பதற்கு இதுவே நிச்சயம்," என்ற அந்தச் சொற்றொடரை மீண்டும் ஒருமுறை பாருங்கள். கொலோசெயர் நிருபத்தின் இந்த இடஅமைப்பு, உலகத் தோற்றத்திற்குமுன்பே, தேவனுடைய மனதிற்குள்ளும், இருதயத்திற்குள்ளும் நம்மைக் கொண்டுசெல்கிறது. இது "பரம இரகசியம்"–தேவனுடைய இரகசியம்– என்றழைக்கப்படுகிறது. தேவன் சிருஷ்டிக்கும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பே தம் இருதயத்தில் ஓர் இரகசியத்தைச் சீராட்டிக்கொண்டிருந்தார்; அது அவருடைய குமாரனோடு தொடர்புடையது. வரலாறு முழுவதும் தேவன் செய்த அனைத்தும் அவர் குமாரனைப்பற்றி அவர் இருதயத்தில் இருந்த இரகசியத்தி லிருந்துதான் வந்தன. எல்லா யுகங்களிலும் தேவன் பல்வேறு முறைகளிலும், வழிகளிலும் வேலைசெய்துகொண்டேயிருந்தார்; அப்போது அவர் இந்த இரகசி யத்தை மனதில்வைத்துத்தான் வேலைசெய்தார்; அவருடைய எல்லா நடவடிக்கை களிலும் அவருடைய இரகசியம் பொதிந்திருந்தது. தேவன் தம் இருதயத்தில் இருந்த பரம இரகசியத்தை நிறைய வார்த்தைகளில் வெளிப்படுத்தவில்லை. அதற்குப்பதிலாக, மாதிரிகளுக்குள்ளும், அடையாளங்களுக்குள்ளும், தீர்க்கதரி சனங்களுக்குள்ளும் அவர் அதை மறைத்துவைத்திருந்தார். அவைகளுக்குள் அவ ருடைய இரகசியம், "பரம இரகசியம்" பொதிந்துவைக்கப்பட்டிருந்தது.

கடைசியாக, காலம் நிறைவேறினபோது, தேவன் தம் குமாரனை, தம் அன்பின் குமாரனை அனுப்பினார். அதன்பின், தம் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட் டின்மூலம், அந்த இரகசியத்தைத் தெரியப்படுத்த தேவனுக்குப் பிரியமாயிருந்தது. கொலோசெயர் நிருபம் ஈடுஇணையற்ற, ஒப்பில்லாத அந்தப் பரம இரகசியத்தைத் திரைநீக்கிக்காண்பிக்கிறது. தேவன் இங்கு தம் இருதயத்தை விரிவாகத் திறந்து காண்பித்தார். தயவுசெய்து அதை மீண்டும் வாசியுங்கள். "அவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார்." இதுதான் திறவுகோல். **எல்லாவற்றிலும்!** ஒரு தனிப்பட்ட விசுவாசியின் இருதயத்தில் இந்தப் பரம இரகசியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே தேவனுடைய எண்ணத்திலும், செயலிலும் இருந்த அவருடைய திட்ட மாகும். இது அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம்! இது நம் அறிவுக்கு அப்பாற் பட்டது! இறுதியாக, தேவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் கூட்டிச்சேர்ப்பார்; ஆனால், அவர் உங்களிலும், என்னிலும் ஆரம்பித்தார். "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்," என்பது தேவனுடைய இரகசியம்; தேவனுடைய இந்த இரகசியம் நித்தியத்திலிருந்து அவருடைய இருதயத்தில் இருந்தது: "உங்களில் கிறிஸ்து." இது நித்தியத்திலிருந்து அவர் தம் இருதயத்தில் வைத்திருந்த பொக்கிஷம். தேவனுடைய மாபெரும் திட்டம் நிஜமாகிவிட்டது. ஒரு தனிப்பட்ட விசுவாசி கிறிஸ்துவை விசுவாசத்தால் தன் இருதயத்தில் கர்த்தராகவும், ஜீவனாகவும் பெற்றுக்கொள்ளும்போது, இது ஆரம்பிக்கிறது.



இது ஓர் ஆரம்பம்தானேதவிர, முடிவல்ல. கிறிஸ்து சிறிய அளவில் தனிப்பட்ட விசுவாசிகளுக்குள் இருக்கிறார்; தனிப்பட்ட விசுவாசியைவிட பெரிய அளவில் அவ ருடைய சரீரமாகிய சபை வருகிறது. இன்னும் பெரிய அளவில், உலகத்தின் தேசங்கள். அதுவும் போதாது. தேவன் தம் திட்டத்தை விரிவாக்கி முழுப் பிரபஞ்சத்தையும் நிரப்புவார். மகிமைப்படுத்தப்பட்ட மனுஷீகம் மட்டும் அல்ல, பரலோக மண்டலங்களும் சேனைகளும்கூட "எல்லாவற்றிலும் முதல்வராகிய கிறிஸ்துவின்" வெளிச்சத்துக்குள் கொண்டுவரப்படும். ஆனால், அது *உங்களில்* ஆரம்பிக்க வில்லையென்றால், உங்களைப் பொறுத்தவரை, அதில் எதற்குமே அர்த்தம் இருக்காது.

முதலாவது தேவன் உள்ளே ஆரம்பிக்கிறார். கிறிஸ்துவையும், விசுவாசியின் இரு தயத்தில் அவருடைய மையநிலையையும்பற்றி பவுல் அதிகமாகப் பேசுகிறார். அவர் தம் சொந்த அனுபவத்திலிருந்தும், தரிசனத்திலிருந்தும் பேசுகிறார். நாம் இதை ஐந்து முக்கியமான அம்சங்களாகப் பிரிக்கலாம்: கிறிஸ்து உங்களில் *வெளிப்படுத்தப்படுதல்*, கிறிஸ்து உங்களில் *வாழ்தல்*, கிறிஸ்து உங்களில் *உருவாக்கப்படுதல்*, கிறிஸ்து உங்களில் *தம் வீட்டை அமைத்தல்*, கிறிஸ்து உங்களில் *மகிமைப்படுத்தப்படுதல்.*

### 1. கிறிஸ்து உங்களுக்குள் வெளிப்படுத்தப்படுதல்

முதலாவது, கிறிஸ்து உங்களுக்குள் வெளிப்படுத்தப்படுதல். "என் தாயின் வயிற்றி லிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக் கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது..." (கலா. 1:15-16). தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் தனக்கு ஏற்பட்ட அனுபவத் தின் *உள்ளான* பக்கத்தை பவுல் இப்படி விவரிக்கிறார். அவருடைய அனுபவத் திற்கு ஒரு புறம்பான பக்கம் இருந்தது. ஆனால், அங்கு ஓர் உள்ளான பக்கமும் இருந்தது; அதற்குள் பவுல் நுழைந்தார். ஏனென்றால், அது அவருக்குள் நுழைந்து விட்டது. அந்த உள்ளான பக்கம், மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத் தையும் மிஞ்சக்கூடிய அளவுக்கு ஓர் ஒளி வானத்திலிருந்து அவர்மேல் வீசிய அந்தக் கணத்தில் மட்டும் ஏற்பட்டதல்ல. திடீரென்று தோன்றிய அந்த ஒளி ஒருவேளை கணநேரம் தோன்றி மறைந்திருக்கும்; ஆனால், உள்ளான பக்கம் மூன்று நாட்கள் தொடர்ந்தது. பவுல் மூன்று நாட்கள் குருடனாக இருந்தார்; இருந்த போதும் அவர் பார்த்துக்கொண்டிருந்தார். மூன்றாவது நாளின் முடிவில் அனனியா வந்து, பவுலின்மேல் தன் கைகளை வைத்தார்; அப்போது பவுல் தன் இயற்கை யான, புறம்பான பார்வையைத் திரும்பப் பெற்றார். அதே நேரத்தில், அவருக்கு ஒரு வெளிப்பாடு கொடுக்கப்பட்டது, இயேசு கிறிஸ்து திரைநீக்கிக்காண்பிக்கப் பட்டார். தம் குமாரனை பவுலுக்குள் வெளிப்படுத்த தேவனுக்குப் பிரியமாயிருந்தது.

அந்த மூன்று நாட்கள் வல்லமையான நாட்கள். பவுல் கர்த்தராகிய இயேசுவை உள்ளே பார்த்தபோது, *தாமதமின்றி*, இயேசு தேவனுடைய குமாரனென்று பிரசங்கிக்க ஆரம்பித்தார் என்று வேதம் கூறுகிறது (அப். 9:20).

அந்தக் கோட்பாடு பவுலுக்கு மட்டும் அல்ல, நமக்கும் பொருந்தும்: எல்லாம் இயேசு கிறிஸ்துவின் உள்ளான வெளிப்பாட்டைச் சார்ந்திருக்கிறது. அந்த வெளிப்பாடுதான் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நம் வாழ்க்கைக்குப் பொருளைத் தருகிறது. தேவனுடனான உறவில் நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்கிறோமோ, அவையெல்லாம், *நம் வாழ்க்கையைப் பொறுத்தவரை* இயேசுவை மையமாகவும், முதன்மையாகவும் ஆக்குகிற ஓர் உள்ளான வெளிப்பாட்டையே சார்ந்திருக்கிறது. மதம் வெளிப்பாட்டிற்கு ஒரு மாற்றுப்பொருள் அல்ல. ஏனென்றால், தர்சு பட்டணத்தானாகிய சவுல் மிகுந்த மதப்பற்றுள்ளவன். சில சமயங்களில், நாம் பவுலின் மனமாற்றத்தை எண்ணிப்பார்க்கும்போது, “அது மிகத் தீவிரமான அனுபவம். அதுபோன்ற வியத்தகு அனுபவம் ஒன்றும் எனக்கு ஒரு போதும் ஏற்படவில்லை,” என்று மனத்தளவில் நினைக்கலாம். தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் ஏற்பட்டதுபோன்ற *புறம்பான* அனுபவம் நமக்கு இல்லாததால், *உள்ளான* அனுபவமும் இருக்க முடியாது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், நான் ஒரு காரியத்தை மிகத் தெளிவாக்க விரும்புகிறேன்: கிறிஸ்துவைப் பற்றிய நம் உள்ளான வெளிப்பாட்டின் அளவுக்கு மிஞ்சி நீங்களும், நானும் உண்மையான கிறிஸ்தவர்களாக, கர்த்தராகிய இயேசுவின் உண்மையான வேலைக்காரர்களாக, ஒருபோதும் இருக்க முடியாது.

அநேகர் இயேசுவைப்பற்றிய முடிவுவரையிலான அறிவை அல்லது வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளவில்லை; ஏனென்றால், அவர்கள் *ஒன்றிலும்* முடிவுவரைச் செல்பவர்கள் அல்ல. தர்சு பட்டணத்தானாகிய சவுல் முடிவுவரைச் செல்லக்கூடிய ஒரு நபர், அவன் எவ்வளவு தூரத்துக்குப் போவதற்கும் தயாராக இருந்தான். அந்த அடிப்படையில் அவனுடைய களத்திலேயே இயேசு அவனைச் சந்தித்தார். சவுல் அப்படி முடிவுவரைச் செல்பவனாக இருந்ததால், இயேசுவும் அவனிடம் முடிவுவரை செல்பவராக இருந்தார். நீங்களோ, நானோ ஆவிக்குரிய காரியங்களில் அடிப்படையில் அஜாக்கிரதையாக இருந்தால், அந்தத் தளத்தில்தான் இயேசு நம்மைச் சந்திக்க வேண்டியிருக்கும்; நம்மால் அவருடன் ஒருபோதும் சேர்ந்துசெல்ல முடியாது. ஆனால், நாம் தவறுகளும், தவறான அறிவும் நிறைந்தவர்களாக இருந்தாலும்கூட, நம் கடைசித் துளியையும் கர்த்தர்மேல் ஊற்றும் கட்டத்தை எட்டும்போது, இயேசு நம்மை அங்கு சந்திப்பார். இயேசுவைப் பற்றிய ஒரு புதிய அறிவு வாழ்வா அல்லது சாவா என்பதுபோல் முக்கியமான விஷயம் என்பதைக் காண, அவர் அநேகரை நம்பிக்கையேயில்லாத ஓர் இடத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டியிருந்தது. இது உண்மையில்லையா? அவர் அவர்களுக்கு ஓர் உள்ளான திரைநீக்கத்தைக் கொடுக்க விரும்பினார். ஆனால், உள்ளாகக் கிறிஸ்துவைப்பற்றிய புதிய வெளிப்பாடு இல்லாமல் தொடர்ந்து வாழ முடியாது, அந்த வெளிப்பாடு இல்லாமல் தொடர்ந்து வாழ விரும்பவில்லை என்று அவர்கள் உணரும்வரை அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அந்த இடத்துக்கு நம்மைக் கொண்டுசெல்ல கர்த்தர் எவ்வளவு கடினமாக வேலைசெய்கிறார்!

இயேசுவின் முகத்தின்மேல் இருக்கும் பிரகாசம் தேவனுடைய மகிமை. மோசே தன் முகத்தில் பிரகாசித்த தேவனுடைய மகிமையை மலையிலிருந்து இஸ்ரவேலரின் பாளயத்திற்குள் கொண்டுவந்ததுபோல, இயேசு அந்த மகிமையை நம் இருதயங்களுக்குள் கொண்டுவருகிறார். தேவன் மோசேயிடம், “நீ இந்த மக்களுக்குத் தேவனைப்போல் இருப்பாய். நீ என் இடத்தில் நிற்பாய்,” என்று கூறினார். இதைவிட அதிகமான, உண்மையான முறையில், இயேசு தம் முகத்தில் இருக்கும் தேவனுடைய மகிமையை நம் இருதயங்களுக்குள் கொண்டுவருகிறார். “இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை” நமக்குத் தரும் பொருட்டாக, அவருடைய ஒளியை நம் இருதயங்களில் பிரகாசிக்கிறார்.



**உள்ளான நிஜமே எல்லாவற்றிற்கும் பரீட்சை**

“தம்முடைய குமாரனை…சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்த தேவனுக்குப் பிரியமாயிருந்தது.” *அவரை* என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக்கொள்ளுங்கள். அந்த வார்த்தைதான் எல்லாவற்றின் இருதயம். அந்த வார்த்தையைவைத்துத்தான் எல்லாவற்றின் மதிப்பையும் அளக்க முடியும் ——*அவரை*! பவுலின் காலத்திலிருந்து, ஓர் இயக்கத்தைப் பரப்ப வேண்டும், ஒரு போதனையை ஊக்கமுடன் வளர்க்க வேண்டும், அல்லது ஒரு நிறுவனத்தின் நலன்களை முன்னேற்ற வேண்டும் என்பதில்தான் கிறிஸ்துவத்தின் பெரும்பாலான நடவடிக்கைகள் இருக்கின்றன. பூமியில் ஓர் இயக்கத்தை ஸ்தாபித்து, அதைப் பின்பற்றுபவர்களையும், அதற்கு அங்கத்தினர்களையும், பற்றாளர்களையும், ஆதரவாளர்களையும் சம்பாதிக்க வேண்டும் என்பதில் நம் இருதயத்தின் கவனத்தைச் செலுத்தக்*கூடாது.* ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டும் என்பது நம் குறியாக இருக்கக்*கூடாது.* அந்த நிறுவனத்துக்கு நாம் “சபை” என்று பெயர் கொடுத்தாலும்கூட, நாம் அப்படிச் செய்யக்கூடாது. தேவனைப் பொறுத்தவரை, இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு இல்லையென்றால், சபை இருக்க முடியாது. தேவனுடைய அன்பின் குமாரனாகிய கிறிஸ்து அதின்மூலம் எந்த அளவுக்குக் காணப்படுகிறார் என்பதை வைத்துத்தான் அது தீர்க்கப்படுகிறது. அது ஓர் உபதேச அமைப்புமுறையினால் அளக்கப்படுவதில்லை. “சாட்சி”யைப்பற்றிப் பேசும்போது, சத்தியத்தை ஒரு வகையாக அமைத்து, அதை ஒருவிதமான சொற்றொடர்களில் விவரிப்பதுதான் “சாட்சி” என்ற எண்ணம் நம் மனதில் இருக்கக்கூடும். அந்த அர்த்தத்தில் நம் மையம் சாட்சியாக இருக்கக்*கூடாது.* மையம், ஒரு ஸ்தாபனமோ அல்லது “ஸ்தாபனமின்மையோ” அல்லது “பொதுவான ஸ்தாபனமோ” அல்ல. மையம், “கிறிஸ்தவ” மதமும் அல்ல. மையம், “வேலையோ” அல்லது “மிஷனோ (மதப் பரப்புப் பணியோ)” அல்ல. “நான் அவரை சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக.” *கிறிஸ்துவே மையம்.*

கிறிஸ்து மையமாக இருந்திருந்தால், துண்டுதுண்டாக்கும் இந்தப் பயங்கரமான போட்டிமனப்பான்மைகள் ஒருபோதும் ஏற்பட்டிருக்காது; “கிறிஸ்தவம்” என்ற நிறுவனத்தில் இன்று இருக்கிற மோசமான குளறுபடி ஒருபோதும் வந்திருக்காது. வெறுமனே ஏதோ ஒரு *காரியம்*—ஓர் இயக்கம், ஒரு மிஷன், ஒரு போதனை, ஒரு சாட்சி, ஓர் ஐக்கியம்—இயேசுவின் இடத்தை எடுத்துக்கொண்டதே இதற்குக் காரணம். அந்தக் *காரியத்தைப்* பேணிவளர்க்க, அந்தக் *காரியத்தைப்* பாதுகாக்க, அந்தக் *காரியத்தை* ஸ்தாபிக்க மக்கள் முற்பட்டுவிட்டார்கள்.

உள்ளான வெளிப்பாடே குணப்படுவதற்கான ஆரம்பம். தேவனுடைய அன்பின் குமாரனாகிய கிறிஸ்து விசுவாசியின் இருதயத்தில் மையமாகவும், முதன்மையாக

வும் இருந்தால், பொய்யான மற்றவைகளெல்லாம் காலப்போக்கில் அழிந்தொழிந்துவிடும். தேவனுடனான உண்மையான முரண்பாடுகள் மற்றவர்களிடமிருந்து நம்மைப் பிரிக்கும்; ஆனால், மனிதனுடைய நடவடிக்கைகளினாலும், பேராசையினாலும் ஏற்படுகிற—மாம்சத்திலிருந்து தேவனுடைய நலன்களுக்குள் புழுக்களைப்போல் நுழைந்துவிடுகிற—அந்தக் காரியங்கள், அந்த செயற்கையான காரியங்கள் விழுந்து விடும். நாம்தான் தெரிந்தெடுக்க வேண்டும். ஒருபுறம், கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாட்டை நாம் நம் இருதயங்களில் பெற முடியும்; அது நமக்கு அவர்மேல் பேரன்பை உண்டாக்கும். மறுபுறம், போதுமான அளவுக்கு வெளிப்பாடு இல்லாததால், அவருடைய நலன்கள் என்று நாம் கருதுகிற மற்ற காரியங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கக்கூடும். ஆனால், அவை ஒருபோதும், ஒருபோதும் தேவனுடைய இருதயத்தைத் திருப்திப்படுத்த முடியாது.

**தேவனுடைய நித்திய இரகசியம்**

நித்தியத்திலிருந்து, தேவனுடைய இருதயத்தில் ஓர் இரகசியம் இருந்தது. அது அவருடைய இருதய-இரகசியம்; ஏனென்றால், அது அவருடைய *பிரிய* குமாரனோடு தொடர்புடையது. தேவன் தம் குமாரனை ஏதோ அலுவலகரீதியான அந்தஸ்தில் வைப்பதற்காக வேலைசெய்யவில்லை. தேவன் இந்தப் பிரபஞ்சத்தை, மிகத் திறமையான, ஆனால் பற்றற்ற தலைமைச் செயல் அதிகாரிபோல் நிர்வகித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்க வேண்டாம். இல்லை, அவருடைய *இருதயம்* அதில் இருப்பதற்குக் காரணம், இயேசு அவருடைய *அன்பின்* குமாரன். இந்த உண்மையை அறிந்து இதை இன்னும் அதிகமாகப் பாராட்டுவதற்கு, பிதா குமாரனைப்பற்றி பேசுகிற வேதவாக்கியங்களை வாசியுங்கள். எடுத்துக்காட்டாக, பொல்லாத குத்தகைக்காரர்களைப்பற்றிய உவமை உங்களுக்கு நினைவிருக்கிறதா? மற்றவையெல்லாம் தோற்றுப்போனபோது, “நிச்சயமாக அவர்கள் என் குமாரனை மதிப்பார்கள்!” என்று சொல்லி எஜமான் அவர்களிடத்தில் தன் குமாரனை அனுப்பினார். அவர்கள் ஏன் அவரை மதிக்க வேண்டும்? ஏனென்றால், அவர் பிதாவின் குமாரன்; ஏனென்றால் அவர்களுக்கிடையே இருந்த உறவு அப்படி. அவர்கள் எல்லா ஊழியக்காரர்களையும் மோசமாக நடத்தினார்கள்; ஆனால், குமாரன் வரும்போது, அவர்கள் நிச்சயமாகத் தங்கள் மனப்போக்கை மாற்றிக்கொள்வார்கள்; நிச்சயமாக அவர்கள் *அவரைப்* போற்றுவார்கள், மதிப்பார்கள், கனம் பண்ணுவார்கள். இதனால்தான் அவர்கள், “இதோ திராட்சைத் தோட்டத்துக்கு வாரிசு வருகிறான்; இவனைக் கொன்று, திராட்சைத் தோட்டத்தை நாம் எடுத்துக்கொள்வோம்,” என்று சொல்லி, முற்றிலும் குமாரனைத் தள்ளிவிட்டார்கள்; எனவே, அவர்கள் மிகப் பெரிய தீர்ப்பைப் பெற்றார்கள்.

இயேசு தேவனுடைய அன்பின் குமாரன். தேவனுடைய இருதயத்தின் திருப்தி அவருடைய இரகசியத்துக்குள் பின்னியிருக்கிறது. அந்த உணர்வுதான் நாம் யாராக இருக்கிறோம், நான் என்ன செய்கிறோம் என்பதின் மையத்தில் இருக்க வேண்டும். “உங்களில் கிறிஸ்து” என்ற தளத்தின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். நித்தியத்திலிருந்து தேவனுடைய இருதயத்தில் இருந்ததை அவர் நிறைவேற்றுகிற வழி––“உங்களில் கிறிஸ்து.” *தேவனுடைய* இருதயத்தில் கிறிஸ்து இருக்கிறார். விசுவாசிகள் *தங்கள்* இருதயத்துக்குள்ளும் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், அவருடைய ஆழமான ஆசை ஒருபோதும் நிறைவேறாது. அப்படியானால், இலக்கு ஒருபோதும் மக்களைக் “கிறிஸ்தவத்துக்குள்” கொண்டுவருவதல்ல, அல்லது அவர்களை ஓர் இயக்கத்தோடு இணைப்பது



அல்ல. மாறாக, அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் இருதயத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், தேவனுடைய திருப்தியாகிய அவருடைய பிரிய குமாரன் அவர்களுடைய பிரிய கர்த்தராகவும், திருப்தியாகவும் மாற வேண்டும் என்பதுமே இலக்கு. நாம் அவரைப் பெற்றுக்கொண்டபிறகு, தேவனுடைய நலன்களுக்காக நாம் எதைச் செய்தாலும்––அது எவ்வளவு சிறியதாக அல்லது பெரியதாகத் தோன்றினாலும் சரி––அது முழுமையாகவும், முற்றிலுமாகவும், எப்போதும் இயேசுவின் ஜீவன் நம்மில் காணப்பட வேண்டும் என்பதற்காகவே இருக்க வேண்டும். *ஒரு கூடுகையோ, சபையோ, இயக்கமோ, சாட்சியோ, ஐக்கியமோ எதுவாக இருந்தாலும் சரி, அதில் இயேசு எந்த அளவுக்கு வெளியாக்கப்படுகிறார் என்பதைத்தவிர, வேறு எதைவைத்தும் அது இருப்பதை, தேவனுடைய கண்ணோட்டத்தில், நியாயப்படுத்தமுடியாது.*

மீண்டும் ஒரு தனி நபரைப் பார்ப்போம்: கிறிஸ்து எந்த அளவுக்கு நம்மூலம் பிரகாசிக்கிறார் என்பதை வைத்துத்தான் நீங்களும் நானும் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதை நியாயப்படுத்த முடியும். நரகத்தின் எல்லாச் சக்தியும், அழுத்தமும், சூழ்ச்சியும் இதற்கெதிராகச் செயல்படுகின்றன. விசுவாசிகள் கிறிஸ்துவைப்போல் இல்லாமலிருப்பதற்கு அவர்களைத் தூண்டிவிட வருகிற சோதனைகளைவிட அதிகமான சோதனைகள் இந்த உலகத்தில் வேறு யாருக்கும் வருவதில்லை. நரகம், கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்கு விரோதமாக அசையாத உறுதியுடன் இருக்கிறது. சாரமுள்ள அனைத்தும் கிறிஸ்துவை வெளியாக்குவதில்தான் ஆரம்பிக்கிறது என்று அதற்குத் தெரியும்.

நம் வாழ்க்கையிலும், சேவையிலும் இந்தச் சத்தியத்தை நாம் மிகப் பிரியமாகப் பற்றிக்கொள்ள வேண்டும். “நான் ஏன் இங்கிருக்கிறேன்? நான் ஏன் கிறிஸ்துவின் பெயரைத் தாங்கியிருக்கிறேன்? தேவனோடு எனக்கிருக்கும் உறவின் பொருள் என்ன? என் இரட்சிப்பின் இலக்கு என்ன? ” இதற்குப் பதில்: *என்* திருப்தி அல்ல, *என்* மன நிறைவு அல்ல, இதுதான் முடிவு என்பதுபோல் என் இரட்சிப்பும் அல்ல; மாறாக, இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப்படுவது, பிதாவின் ஆசைப்படி அவருடைய மையநிலையும், முதன்மைநிலையும் நிஜமாக்கப்படுவது. “நான் எதற்காக வேலை செய்யப்போகிறேன்? ஏதோவொரு ஸ்தாபனத்தை அல்லது ஸ்தாபனமின்மையை நிறுவுவதா? ஒரு போதனைக்கு அல்லது ஒரு சத்திய அமைப்புமுறைக்கு வெற்றியைப் பெறவா? நான் ஏதோவொரு *காரியத்திற்காக* என்னை அர்ப்பணித்திருக்கிறேனா அல்லது எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் பாதங்களின்கீழ் வைக்கப்படுவதற்காக என்னை அர்ப்பணித்திருக்கிறேனா?” நாம் அங்குதான் ஆரம்பிக்கவும், முடிக்கவும் வேண்டும். கிறிஸ்துவே ஆரம்பமும் முடிவும், அவரே அ முதல் ன் வரை, அவரே அல்பாவும் ஓமேகாவும்.

இயேசுவைப் புதிய முறையில் உள்ளாக மதித்துப்பாராட்டுவதற்காகவும், புரிந்துகொள்வதற்காகவும் நாம் பிதாவோடு மிக ஊக்கமாக இடைப்பட வேண்டும். நமக்குள் இருக்கும் அற்பமான எல்லாக் காரியங்களிலிருந்தும் விடுதலைபெற அது மட்டுமே ஒரே வழியாகும். இது “மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்து.” நமக்கு உள்ளே கிறிஸ்துவின் வெளிப்பாடு இல்லையென்றால், மகிமை அடைவோம் என்ற எந்த நம்பிக்கையும் இல்லை; வெட்கமே அடைவோம்.

தேவன்தாமே தம் நாமத்தினிமித்தம் இந்தச் சத்தியத்தை நம் இருதயங்களில் ஆழமாக எழுதுவாராக.

## 2. கிறிஸ்து உங்களில் வாழ்தல்

“கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; இனி வாழ்வது நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்; நான் இப்பொழுது இந்தப் பூமிக்குரிய சரீரத்தில் வாழ்கிற வாழ்க்கையை, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ்கிறேன்” (கலாத்தியர் 2:20). கிறிஸ்து விசுவாசிக்குள் வாழ்கிறார். அதைவிட அதிகமாகச் சொல்வதானால், அவரே விசுவாசியின் ஜீவனாக *இருக்கிறார்*. உள்ளே இருக்கும் கிறிஸ்துவே மையமாகவும், முதன்மையாகவும் இருக்கும் அளவுக்கு அவர் விசுவாசியின் ஜீவனாக இருக்கிறார். இதற்குக் குறைவாகவும் இல்லை, அதிகமாக வும் இல்லை. நமக்குள் இருக்கும் கிறிஸ்து எந்த வகையில் நம் ஜீவனாக இருக் கிறார் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுவதே கலாத்தியர் நிருபத்தின் நோக்கம். இயந்திரத்தனமாகவோ அல்லது இறையியலாகவோ நான் பேச விரும்பவில்லை. ஆனால், தேவனுடைய மக்கள் அவருடைய கிருபையின் மாபெரும் சத்தியங்களைப்பற்றித் தெளிவாகச் சிந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். எனவே, பவுல் இந்த நிருபத்தை எழுதியிருப்பதின் பின்புலத்தை நாம் சற்று பரிசீலிப்போம்.

இயேசு நம் ஜீவன் என்று பேசும்போதெல்லாம், பெரும்பாலும் நாம் இன்னொரு பத்தியையும் குறிப்பிடுகிறோம்: “உங்களுடைய உண்மையான ஜீவனாகிய கிறிஸ்து முழு உலகத்துக்கும் வெளிப்படுத்தப்படும்போது, நீங்கள் அவருடைய எல்லா மகிமையிலும் பங்குபெறுவீர்கள்” (கொலோசெயர் 3:4). கிறிஸ்து நமக்கு வெறுமனே நாம் உயிர் என்றழைக்கிற இன்றியமையாத ஓர் ஆற்றல் அல்ல. நிச்சயமாக அவர் அப்படி இருக்கிறார். ஆனால், அதின் அர்த்தம் இதைவிட இன் னும் ஆழமானது. கலாத்திய விசுவாசிகள் சட்டவாதத்தால் மேற்கொள்ளப்பட்டு, அதில் சிக்கிக்கொண்டிருந்தார்கள்; எனவே பவுல் அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதினார். “ஆ, புத்தியில்லாத கலாத்தியரே, உங்கள்மேல் பொல்லாத மயக் கத்தை ஏற்படுத்திய மந்திரவாதி யார்?” பொய்யான சட்டவாதமே அந்த “மயக்கம்.” பவுலுக்கு அதைப்பற்றித் தெரியும்.

பவுல், தன் பழைய நாட்களில், நியாயப்பிரமாணத்தைப் பற்றிக்கொண்டு வாழ்ந் தார். நியாயப்பிரமாணத்தின்கீழ் இருக்கிற ஒருவன் கண்டிப்பாக அந்த நியாயப் பிரமாணத்தால் வாழ வேண்டும் என்று அவர் விசுவாசித்தார். “இன்னின்னவை களைச் செய்ய வேண்டும்” என்பதைக் கடைப்பிடித்து, “இன்னின்னவைகளைச் செய்யக்கூடாது” என்பதைத் தவிர்த்தபோது, ஒரு மனிதனின் வாழ்க்கை தேவனால் பாதுகாக்கப்பட்டது. ஒரு மனிதன் பூமியில் தன் வாழ்நாள் நீடித்திருக்க வேண்டும் என்று விரும்பினால், அவன் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும். நியாயப்பிரமாணத்தை அவ்வளவு கண்டிப்பாகக் கடைப்பிடித்த தர்சு பட்டணத் தானாகிய சவுலைப்போன்ற ஒரு மனிதனுக்குக்கூட நியாயப்பிரமாணம் பெரிய பார மாக இருந்தது. அது அவன் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருந்த ஒரு வாள். தவறாக ஓர் அடி எடுத்து வைத்தால், அதன் விளைவு மரணமே. நியாயப்பிர மாணம் ஆக்கினைத்தீர்ப்புக்கும், நியாயத்தீர்ப்புக்கும் பிரதிநிதியாக இருந்தது. சுத்திகரிக்கும் சடங்குகளோ அல்லது பலிகளோ மனச்சாட்சியை ஒருபோதும் சுத்தம்செய்யவில்லை அல்லது இருதயத்தை ஒருபோதும் தொடவில்லை. அவை அந்தக் கணப்பொழுதில் மட்டும் பிரச்சினையைத் தீர்த்தன. ஏனென்றால், அவை



புறம்பானவை. ஏதோவொன்று குறைவுபடுகிறது என்ற உள்ளான உணர்வு அங்கு எப்போதும் இருந்தது. நியாயப்பிரமாணம் பாரமான களைப்பை ஏற்படுத்தினாலும், பயமுறுத்தினாலும், தீர்ப்பையும் ஆக்கினையையும் கொடுத்தாலும், மரணத்தின் நிழலையே அது எப்போதும் முன்வைத்தாலும், சவுல் நியாயப்பிரமாணத்தைப் பற்றிக்கொண்டுதான் வாழ்ந்தான்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு பகுதியையும், கோரிக்கையையும் தன் சொந்த சுபாவத்தில் கடைப்பிடித்து, தேவனைப் பரிபூரணமாகத் திருப்திப் படுத்தக்கூடிய ஒரு மனிதனைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை; இதை ரோம ருக்கு எழுதின நிருபத்தின் தொடக்கத்தில் பவுல் மிகத் தெளிவாகக் கூறுகிறார். எல்லாரும் ஆற்றலழிந்து வீழ்ந்து, தோற்றுப்போய்விட்டார்கள். ஒருவனிலும் நீதி யின் வேர்கூட இல்லை. மனிதனுடைய மையத்தில் இல்லாத வெறும் புறம்பான நீதியைக்கொண்டு தேவனை ஒருபோதும் திருப்திப்படுத்தமுடியாது. தேவனுக்கு ஏதோ ஒருவகையான ஏட்டளவு நீதியில் ஈடுபாடு இல்லை; மாறாக, மிக நடை முறைக்குரிய நீதியில் அவர் ஈடுபாடுள்ளவர். ஆனால், உள்ளாக நீதியுள்ள ஒரு மனிதன் ஒருபோதும் இருந்ததில்லை. “என் பழைய பாவ சுபாவத்தைப் பொறுத்த வரை, நான் முழுக்க முழுக்க அழுகிப்போனவன் என்று நான் அறிந்திருக்கிறேன்” (ரோமர் 7:18). பவுல் சடங்குமுறையிலான எல்லா நீதியைக் கைக்கொண்டிருந் தாலும், அவருடைய இந்த அறிக்கை முழு மனுக்குலத்தின் அறிக்கையாகும்.

### ஒரு புது வகையான நீதி

ஒரு மனிதனும் இதுவரை செய்யாததை, இயேசு செய்தார். அவர் தம் *உள்ளான* நீதியின் காரணமாக நியாயாப்பிரமாணத்தை முழுவதும் நிறைவேற்றினார். இதனால், அவர் தேவனைத் *திருப்திப்படுத்தினார்*––புறம்பாகவோ, சடங்குமுறை யிலோ, ஏட்டளவிலோ அல்ல; மாறாக, *உள்ளாக*, அவர் என்னவாக இருந்தாரோ அந்தக் காரணத்தால். அவர் நீதிபரர். அவர் பாவம் இல்லாதவர். எனவே, அவர் தம் நபரில் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி, அதை அப்புறப்படுத்தினார். தேவன் இதற்காகத்தான் காத்துக்கொண்டிருந்தார்––உள்ளும் புறமும் உண்மை யாகவே நியாயப்பிரமாணத்தை முற்றிலுமாக நிறைவேற்றக்கூடிய ஒரு நபருக் காகக் காத்துக்கொண்டிருந்தார். எனவே, இயேசு ஒரு புதிய ஆட்சியைக் கொண்டு வந்தார். இந்த அரசாங்கத்தின் ஆதாரம் “இன்னின்னவைகளைச் செய்யலாம்,” “இன்னின்னவைகளைச் செய்யக்கூடாது” என்பது அல்ல; மாறாக, கிருபையே அதின் ஆதாரம். சட்டமுறைமைக்குப் பதிலாக அதின் இடத்தில் இயேசுவைப் பற்றும் விசுவாசம் இருக்கிறது. அவர், தேவன் மனிதனிடம் கோரிய எல்லாக் கோரிக்கைகளையும் நம் சார்பில் நிறைவேற்றிய மனிதர் என்று நாம் விசுவாசிக் கிறோம். அவர், தங்கள் வாழ்க்கையை அவருக்குள் மறைத்துவைத்திருக்கிறவர் களின் பிரதிநிதி என்றும், தேவன் இப்போது அவர்களில் திருப்தியாயிருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். மனிதன் என்ற முறையில், தேவன் எதிர்பார்த்த நீதியை இயேசு உருவாக்கினார்; தேவன் திருப்தியடைகிறார்.

பிதாவை முற்றிலும் திருப்திப்படுத்தின அதே கிறிஸ்து இப்போது விசுவாசிக் குள் வாழ்கிறார். இயேசுவுக்குள்ளான விசுவாசியிடம் இயேசுவின் எல்லா நீதியும் இருக்கிறது; எனவே, பிதாவும் அவனை ஏற்றுக்கொள்கிறார். ஒரு விசுவாசி தான் முன்பு இருந்ததைவிட, தன் சொந்த வல்லமையால், இப்போது அதிக நீதிமானாக

மாறிவிடுவதில்லை; மாறாக, நீதிபரர் உள்ளே வந்துவிட்டார். "நான் இப்போது வாழ்கிறேன், ஆனால் நியாயப்பிரமாணத்தைப் பற்றிக்கொண்டு அல்ல, மாறாகக் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு. நான் *விசுவாசத்தால்* அவரைப் பற்றிக்கொண்டு, வாழ்கிறேன்," என்று பவுல் கூறுகிறார். இப்போது ஆக்கினைத்தீர்ப்போ அல்லது மரணமோ இல்லை; ஏனென்றால், இங்கு நீதி இருக்கிறது. நீதி ஒருபோதும் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படுவதில்லை. கிறிஸ்துவில் எந்தப் பாவமும் இல்லை; எனவே, மரணத்துக்கு எந்தக் கூரும் இல்லை; நியாயத்தீர்ப்புக்கு எந்த வல்லமையும் இல்லை. விசுவாசத்தால் நான் அவரைப்பற்றிக்கொள்ளும்போது, அழிவில்லாத, பாதுகாப்பான, ஜீவிக்கிறவராகிய அவர் இங்கு நம் இருதயங்களில் இருக்கிறார்.

எப்படி? என்னை ஆக்கினைத்தீர்ப்பின்கீழும் மரணத்தின்கீழும் கொண்டுவர, சகோதரர்கள்மேல் குற்றஞ்சுமத்துகிறவன் என்மேல் குற்றஞ்சுமத்த வரும்போது, "கிறிஸ்துவே என் நீதி" என்று கூறுவதின்மூலம். இப்போது நான் முரண்டுகொண் டிருந்தால், மனமார பாவத்தில் திளைத்துக்கொண்டிருந்தால், பிதாவைப் பிரியப் படுத்த வேண்டும் என்பதில் அக்கறை இல்லாமல் இருந்தால், அது வேறு கதை. ஆனால், என் இருதயத்தில் மனந்திரும்புதல் இருக்கும்போது, பொல்லாங்கன் என்னிடத்தில் வந்து, "உன் பிதா இனிமேல் உன்னை ஏற்றுக்கொள்ளமாட்டார்," என்று என்னைத் தாக்கும்போது, நான் அங்கு நின்று அவனுடைய தாக்குதலை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையில்லை. அதற்கு மாறாக, "எனக்காகப் பிதாவை நிறைவாகத் திருப்திப்படுத்துகிற கிறிஸ்து என்னில் இருக்கிறார். எனவே, பிதா மிகவும் பிரியமாயிருக்கிறார். பிதா குமாரனை இன்னும் நேசிக்கிறார். எனவே, அவர் என்னையும் இன்னும் நேசிக்க முடியும்," என்று நான் பதிலளிக்க முடியும். விசுவாசத்தால் அவரைப் பற்றிக்கொள்ளும்போது, சாவதற்குப்பதிலாக, நான் வாழ் கிறேன், ஆக்கினைத்தீர்ப்பின்கீழ் வருவதற்குப்பதிலாக, நான் வெற்றிபெறுகிறேன். கிறிஸ்துவே ஜீவன். கடுமையாகப்போராடுவதால் அல்ல, அல்லது "நான் அவ் வளவு மோசமானவன் அல்ல" என்று குற்றஞ்சுமத்துகிறவனை நம்பவைக்க முயற்சிசெய்வதால் அல்ல, மாறாக நமக்குள் இருக்கும் கிறிஸ்துவை விசுவாசத் தால் பற்றிக்கொள்வதால் நாம் வெற்றிகரமாக வாழ்கிறோம்.

கிறிஸ்து தேவனுடைய திருப்தி; அவர் நம் இருதயங்களில் வாழ்கிறார். இதைவிட அதிகமாக உங்களுக்கு வேறென்ன வேண்டும்? *நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்.* அப்படியிருக்க, முடிந்துபோன காரியத்தை ஏன் கிண் டிக்கிளற முயற்சிசெய்கிறாய்? "மரித்தவன் பாவத்துக்கு நீங்கலாகி நீதிப்படுத்தப் பட்டிருக்கிறான்." *இனி வாழ்வது நான் அல்ல.* அப்படியானால் என்மேல் ஏன் குற்றஞ்சுமத்த முயற்சிசெய்கிறாய்? *ஆனால், கிறிஸ்து என்னில் வாழ்கிறார்.* அவ ரிடத்தில் பாவம் உண்டு என்று நீங்கள் அவர்மேல் குற்றஞ்சாட்டமுடிந்தால், அதன் பிறகு, எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. ஆனால், பிதாவுக்குத் தேவையான அனைத்தும் அவர்தான் என்றால், நான் அவர்மேல் வைத்திருக்கும் விசுவாசத் தைத் தொடர்ந்து பலமாகக் காத்துக்கொண்டால், நான் வாழ்கிறேன். நான் சாவ தில்லை. நான் வாழ்கிறேன்!

இது, இயேசு எனக்குள் இருக்கிற உயிர்போன்ற ஆற்றல் என்ற உண்மையைவிட அதிகமானது என்பதைப் பாருங்கள். இன்னும் சொல்லப்போனால், அது இதை விடப் பெரியது! இயேசு அவருடைய பிதாவுக்கு என்னவாக இருக்கிறாரோ, பிதா வைத் திருப்திப்படுத்த இயேசு சிலுவையில் என்ன வேலையைச் செய்துமுடித் தாரோ, அவையெல்லாம் இதில் அடங்கும். *அந்த* ஜீவன் *நம்* ஜீவனாக இருக்க நமக்குள் கொண்டுவரப்படுகிறது. விசுவாசம் சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்கிறது; எனவே, நாம் வாழ்கிறோம். "நான் இப்பொழுது பூமிக்குரிய இந்த சரீரத்தில் வாழ்கிற வாழ்க்கையை என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தால் வாழ் கிறேன்."



கிறிஸ்து "நீதியின் மார்க்கவசம்." அவரே நீதிபரர். அவர் *நம்* நீதி. எதிரியை நாமாகவே சந்திக்க முயற்சிசெய்வதால் எந்தப் பயனும் இல்லை. அவனைச் சந்திக்கும் அந்த நேரத்தில், நாம் "நல்லவர்கள்" அல்லது "மோசமானவர்கள்" என்று நம்மைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும் அது ஒரு பொருட்டல்ல. நாம் எதிரியைக் கிறிஸ்துவைக்கொண்டு சந்திக்க வேண்டும். பிதா நம்மிடம் கடினமான கோரிக்கைகளை எதிர்பார்ப்பதுபோல் தோன்றுகிறதா? அவருக்குத் தேவையான அனைத்தையும் அவர் தம் குமாரனில் நமக்கு வழங்கியிருக்கிறார். "உங்கள் இரு கரங்களையும் என் குமாரனால் நிரப்பிக்கொண்டுவாருங்கள் என்று மட்டும்தான் நான் உங்களிடம் கேட்கிறேன். அவருடைய பரிபூரணம் என்னைத் திருப்திப் படுத்துகிறது. அவரிடத்தில் நான் *மிகப்* பிரியமாயிருக்கிறேன்." பிதாவின் எண்ணங் களில் இயேசுவுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ளும்போது ——வெறுமனே உபதேசத்தில் அல்ல, மாறாக ஜீவிக்கும் முறையில் இருதயத்தில் ——வெற்றி என்றால் என்னவென்று நாம் அறிந்துகொள்வோம். வெற்றி யுள்ள வாழ்க்கையை நாம் அறிந்துகொள்வோம்; நாம் நிறைவை அறிந்து கொள்வோம். எந்த அளவுக்கு நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் ஆட் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதுதான், எந்த அளவுக்கு நாம் தேவனுடைய வெற்றிகரமான, ஜெயங்கொள்கிற, மேற்கொள்கிற பிள்ளைகளாக மாற முடியும் என்பதைத் தீர்மானிக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

## 3. கிறிஸ்து உங்களில் உருவாக்கப்படுதல்

"ஆ, என் பிரிய பிள்ளைகளே, நான் மறுபடியும் உங்களுக்காகப் பிரசவவேதனைப் படுவதுபோல் உணர்கிறேன்; கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் நிறைவாக உரு வாகுமளவும் அது தொடரும்" (கலாத்தியர் 4:19). பவுல் இந்த நிருபத்தை கலாத்தி யர்களுக்கு ஏன் எழுதினார்? ஒரு பெரிய தவறை அவர் சரிசெய்ய வேண்டியிருந் தது. அவர்களுடைய ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையின் காரணமாக, அவர்கள் ஒரு "பொல்லாத மயக்கத்திற்குள்" விழுந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நன்றாக ஆரம்பித்தார்கள். ஆனால், முன்னேறிச் சென்று முதிர்ச்சியடையத் தவறிவிட் டார்கள். அதற்குப் பதிலாக, பொய்யான மதம் என்ற பக்கவழியாகச் சென்று விட்டார்கள். கிறிஸ்து அவர்களுக்குள் *உருவாகவில்லை* என்பதுதான் பிரச்சினை என்று பவுல் கூறுகிறார். "ஆம், நீங்கள் விசுவாசிகளாக இருப்பதால், கிறிஸ்து உங்க*ளில்* இருக்கிறார். ஆனால், இந்தக் கிறிஸ்து ஒழுங்காக வரையறுக்கப்படாத கிறிஸ்து, உருவாக்கப்படாத கிறிஸ்து, இலட்சணங்கள் விருத்தியடையாத கிறிஸ்து. அதன் விளைவாகவே, இந்தப் பலவீனம், உலகப்பிரகாரமான தத்துவத்தால் தவ றான வழியில் செல்லும் இந்தப் போக்கு, இருக்கிறது. உங்களிடம் கிறிஸ்து இருக் கக்கூடும். ஆனால், அவர் இன்னும் உங்களுக்குள்ளே உருவாக்கப்பட வேண் டும்."

கலாத்தியர்கள், "விசுவாசிக்கிற எவனுக்கும்...கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்," என்பதைத் தெளிவாகப் பார்க்காததே அவர்களுடைய குழப் பத்திற்குக் காரணம். பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் இயேசு சுத்தமாகப் பிரித்துவிட்டார் என்பதை அவர்கள் உணரவில்லை. கிறிஸ்து நியாயாப்பிரமாணத்தை நிறைவேற்றி, அதை அகற்றிவிட்டார் என்பதை அவர் கள் புரிந்துகொள்ளவில்லை. அங்கு இருந்த பிரச்சினை வெறுமனே உபதேசரீதி யான தவறு அல்ல. இயேசு யார் என்பதை கலாத்தியர்கள் தங்கள் இருதயங் களில் தெளிவாகக் கிரகித்துக்கொள்ளவில்லை. எனவே, முதன்முதலாக ஏற்பட்ட மதரீதியான வஞ்சகத்திற்கு அவர்கள் சுலபமாக ஆளானார்கள். வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், தேவனுடைய பிள்ளைகள் அநேகர் அப்படித்தான் இருக்கிறார்கள். எல்லாவிதமான ஆபத்தான தீவிரவாதங்களுக்கும் அவர்கள் பலி யாகிறார்கள்; ஏனென்றால், கிறிஸ்து தங்களுக்குள் இருக்கிறார் என்பதின் பொருள் என்னவென்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை.

கர்த்தருடைய ஏராளமான பிள்ளைகள் குற்றஞ்சுமத்துகிறவனால் அடிக்கப்பட்டு, அலைக்கழிக்கப்பட்டு, வதைக்கப்படுவது ஏன்? அவர்கள் தங்களுக்குள்ளேயே திரும்பிப்பார்த்து சுய-பகுப்பாய்விலும், ஆரோக்கியமற்ற சுயபரிசோதனையிலும் ஈடுபடுவது ஏன்? அவர்களால் தேவனுக்கும், மற்ற மக்களுக்கும் பயன் இல்லை என்று சொல்லும் அளவுக்கு சுய-சிந்தனையில் ஆழ்ந்துவிடுவது ஏன்? ஏனென்றால், கிறிஸ்து தங்களுக்கு என்னவாக இருக்கிறார் என்பதை அவர்கள் தெளிவாகப் பார்க்கவில்லை. தேவன் அவர்களிடம் எதிர்பார்த்த எல்லாவற்றையும் பொறுத்த வரை, அவர்களுடைய சார்பில் கிறிஸ்து தேவனுக்குப் பதிலளித்துவிட்டார் என் பதை அவர்கள் தங்கள் இருதயத்தின் கண்களால் இன்னும் காணவில்லை. அவர் கள் விசுவாசத்தால் சத்தியத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளவில்லை. கிறிஸ்து வைப்பற்றும் விசுவாசம் நம்மை சுயத்தின் அடக்குமுறையிலிருந்து விடுவிக்கிறது. ஆனால், தங்கள் சொந்தத் திருப்தியைத் தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக மக்கள் ஏதோவொரு தெளிவற்ற வழியில் முயற்சிசெய்தால், அவர் கள் பயங்கரமான போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். அவர்கள் இயேசு வின் தெளிவான இலட்சணங்களைப் பார்க்கவில்லை. கிறிஸ்து அவர்களில் உருவாகவில்லை. அவர் உள்வாழ்கிறார்; ஆனால், இன்னும் உருவாகவில்லை, தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

கிறிஸ்து நம் இருதயங்களில் வாசம்பண்ணுகிறார் என்பதின் பரிமாணங் களை நாம் கிரகித்துக்கொண்டவுடன், நாம் நிற்பதற்கு ஓர் உறுதியான இடம், நிலையான இடம், கிடைத்துவிடுகிறது; அங்கு சட்டவாதியோ அல்லது மலிவான கிருபையை விற்பவனோ வந்து, நம்மை நிலைகுலையச்செய்ய முடியாது. யோவான் அந்திக்கிறிஸ்துக்களின் போதனையைப்பற்றிப் பேசினார். "இது சரியா? இது உண்மையா?" என்று உண்மையான விசுவாசிகள் ஆச்சரியப்பட்டார்கள். கிறிஸ்து *அவர்களில்* உருவாகியிருந்ததால், "நீங்கள் அபிஷேகத்தைப் பெற்றிருக் கிறீர்கள்; அவர் உங்களில் வாழ்கிறார். எனவே, எது உண்மையென்று போதிக்க உங்களுக்கு ஒருவரும் தேவையில்லை. ஏனென்றால், ஆவியானவர் உங்களுக்கு சகல காரியங்களையும் போதிக்கிறார். அவர் போதிப்பது சத்தியம், பொய்யல்ல. எனவே, அவர் உங்களுக்குப் போதித்ததின்படியும், கிறிஸ்துவிலும் தொடர்ந்து வாழ்வீர்களாக," (1 யோவான் 2:27-28) என்று யோவானால் நிச்சயத்துடன் எழுத முடிந்தது. இந்தப் புதிய காரியம் சத்தியமா அல்லது பொய்யா என்று தங்களுக் குள் இருந்த அபிஷேகத்தால் அவர்களால் அறிய முடிந்தது. அவர்களால் அதை வார்த்தைகளில் எழுத முடியாமல் போகலாம். இன்னின்ன காரியங்கள் சரி அல்லது தவறு என்ற விவரங்களை அவர்களால் கூற முடியாமல் போகலாம். ஆனால், கவனமாக இருக்குமாறு சொல்லிய ஒரு சாட்சி அவர்களுடைய இரு தயங்களில் இருந்தது. அபிஷேகிக்கப்பட்டவராகிய கிறிஸ்து அவர்களில் உருவாகி யிருந்தார்.



ஒருபக்கம் நம் சந்தேகங்களும், தவறான எண்ணங்களும், அபிப்பிராயங்களும் இருக்கின்றன; மறுபக்கம், உள்ளான சாட்சி இருக்கிறது. இந்த இரண்டுக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆடுகள் தங்கள் சத்தத்துக்கு அல்ல, மாறாக மேய்ப்பனுடைய சத்தத்துக்குச் செவிகொடுக்க வேண்டும். உங்கள் சொந்த எண்ணங்களை ஏதோவொன்றாக உருவாக்கி, "தேவன் என்னிடம் சொன்னார்," என்று சொல்ல முயற்சிசெய்ய வேண்டாம். உங்கள் மனதைப் பாதுகாக்க சந்தேகக் கண்கள் உங்களிடம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எப்படியிருந்தாலும், உங்களுடைய தவறான எண்ணங்கள் உங்களைப் பாதுகாக்கப்போவதில்லை. நீங்கள் உண்மையாகவே ஆவியானவரில் நடந்துகொண்டிருந்தால், உங்கள் முகத் தோற்றத்தையும், மனதையும் நீங்கள் திறந்துவைத்துக் கொள்ளலாம். நீங்கள் பிர மையோ அல்லது பெருமையோ இல்லாமல் வாழ முடியும். உங்களில் அல்ல, மாறாக அபிஷேகத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும். உங்களால் அதை மிக நன்றாக வரையறுக்க முடியாமல் போகலாம்; ஆனால், "தொட்டறியமுடியாத ஏதோவொன்று என் இருதயத்தில் இருக்கிறது; அதற்கு நான் கவனம் செலுத்த வேண்டும்," என்று உங்களால் சொல்ல முடியும்.

உள்ளே கிறிஸ்து உருவாகிவிட்டார் என்றால், நீங்கள் தெளிவான, வரையறுக்கப் பட்ட ஓர் இடத்துக்கு வந்துவிட்டீர்கள் என்று பொருள். கிறிஸ்துவின் இலட்சணங் கள் உள்ளே வரையறுக்கப்பட்டுவிட்டன, கூர்மையாக்கப்பட்டுவிட்டன. "கிறிஸ்து வின் மனம்" உருவாகிவிட்டது. "சகோதரர்களே, நான் உங்களைக்குறித்து வலியால் துடிக்கிறேன், பேறுகால வேதனைப்படுகிறேன். கிறிஸ்து உங்கள் இருதயங்களில் உருவாகிவிட்டார் என்ற இடத்துக்கு நீங்கள் வரும்வரை, உங்களுடைய தற்போதைய நிலைமை எனக்குப் பயங்கரமான வலியை உண்டாக்குகிறது," என்று பவுல் கூறுகிறார். இதுதான் கலாத்தியர் 4:19இன் பொருள்.

## 4. கிறிஸ்து உங்களில் தம் வீட்டை அமைத்தல்

தரிசனம் இதைவிட இன்னும் அதிக மகிமையடைகிறது; "நீங்கள் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கையில், அவர் உங்கள் இருதயங்களில் தம் வீட்டில் இருப் பதுபோல் அதிகமதிகமாக இருக்குமாறு நான் ஜெபிக்கிறேன். தேவனுடைய அற்புத மான அன்பு என்ற நிலத்துக்குள் உங்கள் வேர்கள் ஆழமாகச் செல்வதாக" (எபே சியர் 3:17). "கிறிஸ்து உங்கள் இருதயத்துக்குள் வந்து, அங்கு வாழுமாறு நான் ஜெபிக்கிறேன்," என்று இந்தப் பத்தி சொல்லவில்லை. "கிறிஸ்து உங்கள் இரு தயத்தில் தம் வீட்டை அமைத்துத் *தங்குவாராக*," என்பதே கிரேக்க மூலபாடத்தின் பொருளாகும். இது, கிறிஸ்து சும்மா உள்ளே வந்து, உங்களுக்குள் இருப்பதை விட அதிகமானது. அவர் உங்கள் இருதயத்தைத் தம் வீடாக்க விரும்புகிறார். கட்டடங்கள் எல்லாம் வீடாகிவிடாது.

இயேசு வந்தபோது, அவர் தமக்குச் சொந்தமானவர்களிடம் வந்தார். ஆனால், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை," என்று இயேசு கூறினார். ஆனால், அவர் ஓர் இடத்திற்கு அடிக்கடி சென்றுவந்தார். அது பெத்தானியாவில் இருந்த லாசரு, மரியாள், மார்த்தாள் ஆகியோரின் வீடு. இறுக்கமும், கலக்கமுமான நேரத்திலும் கூட அவர் அங்கு சென்றார். அவருடைய இருதயம் அங்கு திருப்தியடைந்தது. அங்கு ஒரு பெண் இருந்தாள்; அவள் "அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்," என்று வேதம் கூறுகிறது. இயேசு தம்மை ஊற்றுவதற்கான இருதயங்களை, தம்மைப் பாராட்டுகிற இருதயங்களை, "நல்ல பங்கைத் தெரிந்தெடுக்கும்" இருதயங்களை விரும்பினார். அவர் தாம் தேடிக்கொண்டிருந்ததைப் பெத்தானியாவில் கண்டுபிடித்தார்.

மார்த்தாள் மாறுவதற்குமுன் எப்படியிருந்தாளோ அப்படித்தான் நாம் பெரும்பாலும் இருக்கிறோம். அவள் மாறினாள்; அதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மார்த்தாளைப்பற்றி நாம் கடைசியாகப் பார்க்கும்போது, அவள் இன்னும் பணிவிடைசெய்துகொண்டிருக்கிறாள்; ஆனால், இப்போது அவள் புறம்பாகச் செய்துகொண்டிருக்கும் நடவடிக்கைகள் உள்ளான ஜீவனைத் திணறடிக்கவில்லை. இன்று அநேகர் சரிசெய்யப்படுவதற்கு*முன்* இருந்த மார்த்தாளைப்போல் இருக்கிறார்கள். தனக்குச் செவிகொடுக்கும் ஒரு நண்பனுக்காக இயேசு ஏங்கிக்கொண்டிருக்கையில், இவர்கள் அவருக்காகப் பரபரப்பாகக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இயேசு சொல்வதைக் கேட்க நமக்குக் காதுகள் இருந்தால், "நீ எனக்காக நிறையக் காரியங்களைச் செய்ய விரும்புகிறாய் என்று எனக்குத் தெரியும். உன் நோக்கங்கள் நல்லவை. நீ செய்வதை நான் பாராட்டுகிறேன். ஆனால், நான் உன்னுடனும், நீ என்னுடனும் அமைதியாகப் பேசுவதற்கு நீ எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். அப்போது நான் என்னை உனக்கு இன்னும் அதிகமாக வெளிப்படுத்துவேன். அது ஒரு பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தும்," என்று அவர் சொல்லக்கூடும்.

சில சமயங்களில், இயேசு நம்மை நம் பரபரப்பிலிருந்து−−தொலைபேசிகளிலிருந்தும், கைபேசிகளிலிருந்தும், வீட்டுவேலைகளிலிருந்தும்−−அவர் பேசுவதைக் கேட்கும் ஓர் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போவார். சோம்பேறியாக இருப்பதாக மற்றவர்கள் நினைக்கக்கூடும் என்று அறிந்தும் மரியாள் துணிந்து அப்படிச் செய்தாள். அவள் வேலைசெய்யவில்லை என்பதால் மார்த்தாள் புகார் செய்தாள். நம்மையும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடும். சில சமயங்களில், "தொந்தரவு செய்ய வேண்டாம்" என்று கதவில் ஒட்டிவிட்டால், தொலைபேசியை எடுத்து கீழே வைத்துவிட்டால், இயேசுவுடன் இன்னும் கொஞ்ச நேரம் அதிகமாக செலவழித்துவிட்டால், "காரியங்கள் நடக்காது" என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால், இயேசு அப்படிப்பட்ட ஆசையை எங்கு காண்கிறாரோ, அவர் அங்கு வந்து தம் வீட்டை அமைப்பார். இது அவர் ஒரு விடுதியில் தங்குபவர்போல் தங்குவதைவிட மிக அதிகமானது. இது கிறிஸ்து உங்கள் இருதயத்தில் தம் வீட்டில் இருப்பதுபோல் உணர்வதாகும். இயேசுவின் கண்ணோட்டத்தில், நீங்கள் செய்யும் எல்லா வேலையும், அவர் உங்கள் இருதயத்துக்குள் இன்னும் நிறைவாகப் பேசுவதற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் வாய்ப்புக்கு ஒருபோதும் மாற்றாக இருக்க முடியாது. அவர் உங்களிடம் பேச விரும்புகிற நேரத்தை நீங்கள் அவருக்குக் கொடுக்காவிட்டால்,



அவர் உங்களுக்குக் காண்பிப்பதற்கு நீங்கள் மறுமொழி கொடுக்காவிட்டால், நீங்கள் செய்கிற வேலை ஜீவனற்றதாகவே இருக்கும்.

**5. கிறிஸ்து உங்களில் மகிமைப்படுத்தப்படுதல்**

"கிறிஸ்து தம் பரிசுத்த மக்களிடத்தில் மகிமைப்பட வரப்போகிற நாளைப்"பற்றி பவுல் பேசுகிறார் (2 தெசலோனிக்கேயர் 1:9). *தம் பரிசுத்த மக்களிடத்தில்* மகிமைப்படுத்தப்படுதல். இதுவே "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களில் இருக்கிறார்" என்பதின் நிறைவேறுதலாகும். அவர் மகிமையோடு வருவதைப் பார்க்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், இடைப்பட்ட நேரத்தில், அவர் ஏதோவொரு வேலை செய்துகொண்டிருக்கிறார்; அதன் விளைவாக அவர் வரும்போது, அவருடைய மகிமை அவருடைய *பரிசுத்தவான்களிடத்தில்* காணப்படும். "நான் ஒரு மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஒரு சாட்சியுமாக இருக்கிறேன். அவர் திரும்பி வரும்போது, நானும் அவருடைய மகிமையிலும், கனத்திலும் பங்குபெறுவேன்" (1 பேதுரு 5:1). நாம் இயேசுவின் மகிமையைக் காண வேண்டும் என்பதற்காக அவர் ஜெபித்தார். நாம் விசுவாசித்தால், அவர் *நம்மில்* மகிமைப்படுத்தப்படுவார், நம்மில் அவரைக் கண்டு வியப்படைவார்கள்.

உலகத்தின் பார்வையில், அவர் ஒரு நாள் மலைமேல் நடந்துபோன சாதாரணமான ஒரு சாமான்யன். ஆழமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிறையக் காரியங்கள் அவரிடம் இருந்தன். ஆனால், புறம்பாக அவர் மற்ற சாதாரணமான மனிதர்களைப்போலவே இருந்தார். அதன்பின், அவர் மலையின் உச்சியை அடைந்தார். திடீரென்று அவர் பரலோக மகிமையோடு சுடர்விட, கொழுந்துவிட்டெரிய, ஆரம்பித்தார். அவருடைய வஸ்திரங்கூட வெளிச்சத்தைப்போல் வெண்மையாயிற்று. சாதாரணமான அந்தச் சாமான்யன் திடீரென்று மாற்றமடைந்து தேவனுடைய மகிமையைப் பிரகாசித்தார். அவருடைய கூட்டாளிகள் எந்த அளவுக்கு மலைத்துப்போனார்களென்றால், தாங்கள் பேசுவது என்னதென்று அறியாமலே பேச ஆரம்பித்தார்கள்.

*அந்தக் கிறிஸ்து நம்மில் இருக்கிறார்.* நாம் மிகச் சாதாரணமான மக்கள். அவ்வளவு கவர்ச்சிகரமான, கவனிக்கத்தக்க, அல்லது தனிச்சிறப்பான எதுவும் நம்மில் இல்லை. ஆனால், உருமாற்ற மலையில் இயேசுவுக்கு நிகழ்ந்த அதே காரியம் நமக்கும் நிகழப்போகிற நேரம் வந்துகொண்டிருக்கிறது. கிறிஸ்து நம் மூலம் மகிமையோடு சுடர்விட்டுப் பிரகாசிக்கப் போகிறார். மலையில் அவருடன் நின்றவர்கள் அவரைப் பார்த்து வியந்ததுபோல, உலகமும் *விசுவாசிக்கிற நம்மில்* மீண்டும் அவரைப் பார்த்து வியப்படையும். பரம இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" என்பதே அந்த இரகசியம். ஆரம்பம்முதல் முடிவுவரை, விசுவாசியின் நம்பிக்கை, இயேசு இருதயத்தில் மையமாகவும், முதன்மையாகவும் ஆளுகைசெய்கிறார் என்பதையே சார்ந்திருக்கிறது.

**"உங்களில் கிறிஸ்து" என்ன கோருகிறார்?**

நாம் பேசின ஐந்து நிலைகளையும் மீண்டும் ஒருமுறை திரும்பிப் பாருங்கள். அவைகள் விசுவாசியிடம் என்ன எதிர்பார்க்கின்றன என்று பாருங்கள். கிறிஸ்து

சவுலுக்குள் *வெளிப்படுத்தப்பட்ட* அந்த நாளில், அவன் "இயேசு கிறிஸ்துவின் கைதியாகச்" சிறைப்பிடிக்கப்பட்டான். நீங்களும் நானும் சிறைப்பிடிக்கப்பட வேண்டும். கிறிஸ்து பவுலில் *வாழ்வதற்காக*, அவன் "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட" வேண்டியிருந்தது. நீங்களும் நானும் சிலுவையிலறையப்பட வேண்டும். கிறிஸ்து நம்மில் உருவாக்கப்படும் காரியத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? கலாத்திய விசுவாசிகள் அசையாமல் நிற்காமல் அல்லது பக்கவழியில் செல்லாமல், அவருடன் சேர்ந்து செல்ல வேண்டியிருந்தது. நாமும் அதையே செய்ய வேண்டும். கிறிஸ்து நம் இருதயங்களில் *தம் வீட்டை அமைப்பது* "சகல பரிசுத்தவான்களோடுங்கூட அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாவதோடு" தொடர்புடையது. பரிசுத்தவான்கள்மேலுள்ள பரஸ்பர அன்பு நம் இருதயத்தை ஒரு பெத்தானியாவாக மாற்றுகிறது; அங்கு இயேசு ஒரு வீட்டைக் காண்கிறார். எனவே, கிறிஸ்துவுடனான சேர்க்கையின் ஒவ்வொரு நிலையும் விசுவாசியின்மேல் அதினதின் பொறுப்பையும், கோரிக்கையையும் சுமத்துகிறது.

அதன்பின், கிறிஸ்து நம்மில் *மகிமைப்படுத்தப்படுதல்* என்ற முழுநிறைவுக்கு வருகிறோம். தெசலோனிக்கேயர் நிருபத்தில், பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்படுவதைப்பற்றி பவுல் பேசுகிறார்; அங்கு அவர் அவர்கள் அநுபவிக்கிற பாடுகளைப்பற்றியும், அவர்களுடைய இரட்சகர்நிமித்தம் அநுபவிக்கிற சந்தோஷமான பாடுகளைப்பற்றியும், பேசுகிறார். அவர்கள் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கும், அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்ப்பதற்கும், விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினபோது" அது விநோதமான காரியம் என்று உலகம் நினைத்ததால், அவர்கள் பாடநுபவித்தார்கள். மகிமையடைகிற முழுநிறைவு, பாடுகளின் மத்தியில் நாம் எவ்வளவு உத்தமமாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறோம் என்பதோடு தொடர்புடையது.

கர்த்தருடைய குறிக்கோளுக்கு ஒரு மறுமொழியையும், அவருடைய இருதயத்தின் இரகசியம் நிஜமாக்குகிற காரியங்களையும் அவர் நம்மில் காண்பாராக: "கிறிஸ்து உங்களில் இருப்பதே மகிமையின் நம்பிக்கை." இதுவே மையம், முதன்மை.

### III. கிறிஸ்து தம் சரீரத்தின் வாழ்க்கையில் மையமும், முதன்மையும்

கிறிஸ்து மையமாகவும், முதன்மையாகவும் ஆளுகைசெய்கிற இரண்டாவது மண்டலம் அவருடைய சரீரமாகிய சபை.. "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். "இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் என்பதற்கும், அவர் *எல்லாவற்றிலும்* முதல்வர் என்பதற்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. அவர் உயிர்த்தெழுந்ததால், தம் சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கிறார். இயேசு இடம், காலம் ஆகிய இரண்டிலும் முதல்வராயிருக்கிறார். அவர் காலத்தில் முதல்வர்; ஏனென்றால், மரித்தோரிலிருந்து எழப்போகிற எல்லாருக்காகவும் அவர் முன்னோடியாக வழியுண்டாக்கிச் சென்றார். அவர் இடத்தில் முதல்வர்; ஏனென்றால், அவருடைய உயிர்த்தெழுதல் அவரை சபைக்குத் தலையாக்கியது.

#### தலைமைத்துவம்

தனிப்பட்ட விசுவாசியின் வாழ்க்கையில் இயேசுவின் மையநிலையையும், முதன்மைநிலையையும்பற்றி நாம் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட



ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு தலை இருந்தாலுங்கூட, ஒவ்வொரு விசுவாசிக்கும் தனித்தனியாக ஒரு தலை இல்லை. அப்படி இருந்தால், ஒவ்வொரு நபரிடமும் சுயாதீனமான ஓர் அதிகாரம் இருக்கும். ஆனால், பத்து கோடி தலைகள் இல்லை, ஒரேவொரு தலை மட்டும்தான் இருக்கிறது. ஒரேவொரு தலை: சகலமும் உறவுமுறையிலானவை, தனித்துவமானவை அல்ல என்பதே இதன் பொருள். சரீரம் என்ற கருத்தே ஒரு தலையின்கீழ் இருக்கும் ஒருமையைக் குறிக்கிறது.

தனிப்பட்ட விசுவாசியின்மேல் கிறிஸ்துவுக்கு உள்ள முதன்மைநிலை சரீரத்தின் ஆவிக்கு நடத்தும். விசுவாசிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்து நிஜமாகவே மையமாகவும், முதன்மையாகவும் இருந்தால், சரீரமே அதின் இயற்கையான, இயல்பான, தவிர்க்கமுடியாத விளைவாக இருக்கும் என்பதே அதன் பொருள். "விசுவாசத்தால் கிறிஸ்து உங்கள் இருதயத்தில் வாழ்ந்தால் நீங்கள் அன்பில் வேரூன்றி நிலைபெற்றவர்களாகி...சகல பரிசுத்தவான்களோடுங்கூட...அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாவீர்கள்." தனிப்பட்ட இருதயத்தில் கிறிஸ்து வாழ்வது "சகல பரிசுத்தவான்களோடு" வாழ்வதற்கு உங்களை நடத்த வேண்டும்.

தங்கள் இருதயத்திலும், வாழ்க்கையிலும் கிறிஸ்துவே முதன்மையாக இருக்கிறார் என்று மக்கள் கூறி விட்டு, அதன்பின் அவர்களுடைய மதிப்பீடுகளிலும், வாழ்க்கைமுறையிலும் சுயாதீனம் காணப்பட்டால், அது ஒரு முரண்பாடு. அங்கு ஒரு *பயங்கரமான* முரண்பாடு இருக்கிறது. சுயாதீனமாகச் செயல்பட்டால், தனிப்பட்ட நலனில் அக்கறையாக இருந்தால், அந்த வாழ்க்கையில் கிறிஸ்து முற்றிலுமாக முதன்மையாக *இருக்க முடியாது*. தாங்கள் வைத்ததுதான் சட்டம் (அப்படிச் செய்வதாக அவர்கள் ஒருவேளை ஒருபோதும் ஒப்புக்கொள்ளாவிட்டாலுங்கூட) என்பதுபோல் மக்கள் செயல்பட்டால், தனியாகவும், பிரிந்தும், சுயாதீனமாகவும் அவர்கள் வாழ்ந்தால்--தேவனுடைய மற்ற மக்களிடமிருந்து பிரிந்து தண்ணீர் புகமுடியாத ஓர் அறைக்குள் வாழ்வதுபோல வாழ்ந்தால்--அங்கு ஒரு முரண்பாடு இருக்கிறது. அங்கு கிறிஸ்து மையமாகவோ அல்லது முதன்மையாகவோ இல்லை. கிறிஸ்துவின் சரீரம் என்ற எண்ணத்தோடு சுயாதீனம் ஒத்துவராது; அதுபோல், கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தோடும் சுயாதீனம் ஒத்துவராது. தனிப்பட்ட விசுவாசியின் தலையாக மட்டும் அல்ல, சரீரத்தின் தலையாகவும்--எல்லாருக்கும் ஒரே தலையாக--அவர் முதன்மையானவராக ஆளுகை செய்கிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலின் பலனாகிய சரீரம் சுயாதீனத்தின் ஆவியைத் தலைகீழாக்கி விடுகிறது.

#### கிறிஸ்துவின் சரீரம் அவருடைய வெற்றி

இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதே, பிரபஞ்சத்தின் வரலாற்றில், தேவனுடைய வல்லமையின் வியத்தகு கண்காட்சியாகும். அது தேவனுடைய வல்லமையான வெற்றி. கிறிஸ்துவின் சரீரம் அந்த உயிர்த்தெழுதலில் விளைந்த ஓர் உற்பத்திப்பொருள். எனவே, அது அந்த வெற்றியைக் குறிக்கிறது.

"*விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில்* செயலாற்றுகிற அவருடைய வல்லமை எத்துணை ஒப்புயர்வு அற்றது, மேலானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பி,

பரலோக மண்டலங்களில் தேவனுடைய வலப் பக்கத்தில் கனத்துக்குரிய இடத்தில் அமரச்செய்தது வலிமைமிக்க இப்பேராற்றலே. இப்போது அவர் தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர், வலிமைமிக்கோர், ஆட்சிபுரிவோர் ஆகிய அனைவருக்கும் மேலாகவும், இந்த உலகத்தில் மட்டும் அல்ல, வரப்போகிற உலகத்திலும் வேறு எப்பெயர் கொண்டோருக்கும் மேலாகவும் உயர்ந்திருக்கிறார். தேவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவின் அதிகாரத்தின்கீழ் வைத்தார். *சபையின் அனுகூலத்துக்காக*, அவர் அவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தார். சபை அவருடைய சரீரம்; அது எல்லாவற்றையும் எங்கும் தம் பிரசன்னத்தால் நிரப்புகிறவருடைய கிறிஸ்துவால் நிரம்பியிருக்கிறது," என்று பவுல் எழுதினார்.

கிறிஸ்துவின் சரீரம் தேவனுடைய வெற்றியின் மனுவுருவம். அவருடைய வெற்றி, இந்தப் பிரபஞ்சத்திற்குள் வந்து, சிருஷ்டிப்பிற்குள் பிளவையும், பிரிவினையையும், சிதைவையும் கொண்டுவந்த ஆவியின்மேல் பெற்ற வெற்றியாகும். எல்லாம் தம் குமாரனில் கூட்டிச்சேர்க்கப்பட்டு முழுமையாக இருக்க வேண்டும் என்று கடந்த நித்தியத்திலிருந்து தேவன் விரும்பினார். சிருஷ்டிப்பு, தம் அன்பின் குமாரனில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவனுடைய குமாரனின் முதன்மைநிலையையும், வரம்பற்ற மகிமையையும் சாத்தான் பார்த்தபோது பேராசைப்பட்டான். குமாரனுக்கு மேலான ஓர் அந்தஸ்தைப் பெற அவன் சூழ்ச்சிசெய்தான். எனவே, தலையோடு இருந்த உறவிலிருந்து அவன் பிரிந்து போனான். ஆவி, செயல், நோக்கம் ஆகிய மூன்றிலும் தன் சுயாதீனத்தால், அவன் தன் சொந்த மகிமையைத் தேடத் தீர்மானித்தான். எனவே, பரலோகத்தில் யுத்தம் உண்டாயிற்று. ஒருமை உடைந்துபோயிற்று. சாத்தானைப் பின்பற்றின தூதர்கள் தங்கள் ஆதி நிலையைக் காத்துக்கொள்ளவில்லை; அவர்கள் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டார்கள். லூசிபர் அந்த ஆவியைக் கீழே பூமிக்குக் கொண்டுவந்தான். தேவன் தம் இருதய இரகசியத்தின்மூலம் எல்லாவற்றையும் மனிதனுக்குக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். ஆனால், தேவன் *இல்லாமலேயே* எல்லாவற்றையும் அபகரித்துக்கொள்ள எதிரி மனிதனை ஆசை காட்டி இழுத்தான். இப்போது, பரலோகத்தில் இருந்த பிரிவினை பூமியில் இருந்தது. அந்த நேரத்திலிருந்து சுயாதீனமும், சுய-நடத்துதலும், சுய-உணர்ந்தறிதலும், சுய-உடைமையாக்குவதுமே விழுந்துபோன மனித இனத்தின் இருதயத்தில் இருக்கிறது. இதுவே மாம்சம். இது பரலோகத்தில் ஏற்பட்ட கலகம் மற்றும் பூமியில் ஏற்பட்ட அழிபாடுகளின் பயங்கரமான வரலாற்றின் பின்புலம்.

கிறிஸ்து வரும்வரை, கிறிஸ்துவில் தேவன் வரும்வரை, ஒருமை இல்லை. எதிரி, கிறிஸ்துவில் தேவனை நேருக்குநேர் சந்திக்க வேண்டியிருந்தது. தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பி, அவருடன்——மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் என்ற முறையில்——அவருடைய சரீரமாகிய சபையைக் கொண்டுவந்தபோது, அவர் பிசாசின் வேலைகளை முறியடித்து வென்றுவிட்டார். கிறிஸ்துவின் சரீரம் பிசாசின் சிதைக்கிற, பிரிக்கிற, பிளக்கிற வேலையின்மேல் தேவன் பெற்ற வெற்றியைக் குறிக்கிறது. இந்தக் காரணத்தினால்தான் சாத்தான் சபையை இவ்வளவு தீவிரமாக வெறுக்கிறான், எதிர்க்கிறான். தொடக்கத்திலிருந்து, பிசாசு இடைவிடாத ஆற்றலோடு தேவனைத் தூற்றிக்கொண்டேயிருக்கிறான். இயேசு உயிர்த்தெழுந்தபிறகு, அவன் அந்த ஆற்றலைக் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் திருப்பியிருக்கிறான்; பிளவையும், பிரிவினையையும் உருவாக்க அடியெடுத்து வைக்க மாம்சத்தைப் பயன்படுத்த அவன் முயன்றுகொண்டிருக்கிறான்.



இவைகளுக்குப் பின்னால் மாம்சம் இருக்கிறது. "சகல கணுக்களினாலும் இணைக்கப்பட்டு, பின்னப்பட்டு," "ஒன்றாகச் சேர்த்திணைக்கப்பட்டு," "மனதிலும், எண்ணத்திலும் முற்றிலும் இணைக்கப்பட்ட" மக்கள் என்ற எண்ணத்தை சாத்தான் பயங்கரமாக எதிர்க்கிறான். ஏனென்றால், அவன் தேவனுடைய வெற்றிக்கு எதிரான ஒரு முரண்பாட்டை நிறுவ முயற்சிசெய்கிறான். ஆனால், தேவன் இப்படிப்பட்ட மக்களைப் பெறுவார். ஒருமை நம்மில் இல்லை; மாறாக, கிறிஸ்துவில் இருக்கிறது. நம் ஒருமை ஒரு நபர். இந்தக் காரணத்தினால்தான் கிறிஸ்து மையமாகவும் முதன்மையாகவும் ஆளுகைசெய்யக்கூடிய ஒரு கூட்டம் மக்கள் தேவனுக்கு நிச்சயமாகத் தேவைப்படுகிறார்கள்.

**கிறிஸ்து, ஒற்றுமையாக்கும் மையம்**

நம் தனிப்பட்ட நலனை——ஒருவகை போதனை அமைப்புமுறையை அல்லது ஸ்தாபனத்தை——ஆதரித்து வளர்க்க நாம் முயற்சிசெய்தால், அதன் விளைவு இன்னும் அதிக பிரிவினையாகத்தான் இருக்கும். இயேசுவை கர்த்தராக உயர்த்துவதற்கு மட்டும் நாம் முயற்சிசெய்தால், பிசாசுக்கு நம்மால் பதில் சொல்ல முடியும். நம்மிடம் வெற்றியின் இரகசியமும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையும் இருக்கின்றன. சரீரத்தில் இயேசு வெளிப்படுத்தப்பட வேண்டும். அவருடைய சரீரம் அவருடைய வெற்றி என்பதை நாம் பார்க்க வேண்டும்——இது சுயாதீனம் அனைத்தையும் தலைகீழாக்கிவிடுகிறது. ஆவியில் அல்லது செயலில் சுயாதீனமாக இருப்பது ஒரு மீறுதல்--சரீரத்தின் சத்தியத்தைப்பற்றிய மீறுதல் மட்டும் அல்ல, உயிர்த்தெழுதலின் வல்லமையைப்பற்றிய மீறுதல்——என்பதை நாம் உணர வேண்டும்.

இதையல்லவா பவுல் கொரிந்தியர்களிடம் சொன்னார்? "அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், *கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால்*, தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்." உடனே, கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததுதான் எல்லா நோய்களுக்கும் காரணம் என்று நினைக்கக்கூடாது. ஆனால், கொரிந்துவில், அப்படி அறியாததால்தான் அநேகர் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள், மரித்தார்கள். சரீரத்தை நிதானித்து அறிந்திருந்தால், அந்த நோயோடு இடைப்பட்டிருக்க முடியும். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்." ஏன் மூப்பர்களை வரவழைக்க வேண்டும்? அது கிறிஸ்துவின் சரீரத்தை நிதானித்து அறிவதாகும். அவர்கள் சரீரத்தின் பிரதிநிதிகள்; சரீரத்தைக் கொண்டுவருகையில் அங்கு வெற்றி கிடைக்கிறது.

நாம் தெய்வீக ஒழுங்கைப் பார்க்கத் தவறியிருந்தால், நாம் அநுபவிக்கவேண்டியதைவிட ஒருவேளை அதிகமாகப் பாடநுபவித்துக்கொண்டிருக்கக்கூடும். எதிரியானவன் செய்யவேண்டியதைவிட அதிகமான பேரழிவை உண்டாக்கியிருக்கக் கூடும். ஏனென்றால், நாம் தெய்வீகத் தீர்வைப் பிரயோகிக்கத் தவறிவிட்டோம். சரீரத்தை உள்ளே கொண்டுவருவதற்குப்பதிலாக, நாம் காரியத்தை நமக்குள்ளேயே வத்துக்கொண்டோம். தனித்துவம் ஒவ்வொரு மண்டலத்திலும் நிறையக் காரியங்களை நம்மிடமிருந்து திருடிக்கொள்கிறது.

### சுயாதீனமான வாழ்க்கை தேவனுடைய சித்தத்துக்கு முரணானது

சரீரம் சுயாதீனத்துக்கு நேர்மாறானது. சுயாதீனமும் பிரிந்தநிலையும் இருக்கும் போதும், நாம் முழுச் சரீரத்தின் ஒரு பகுதி என்பதை உணராமல் நம் சொந்த நலனில் மட்டும் அக்கறைசெலுத்தும்போதும், தேவனுடைய சில மாபெரும் வெளிப்பாடுகளை நாம் மீறுகிறோம். கர்த்தராகிய இயேசு தம் சரீரமாகிய சபையின்மூலம் எதிரியின் பயங்கரமாக எல்லா வேலைகளையும் தலைகீழாக்கி விடுகிறார். செயலிலும், ஆவியிலும் சிதைக்கும் சுயாதீனத்தைப் பிசாசு மனித இனத்துக்குள் நுழைத்துவிட்டான்; இயேசு அதன்மேல் வெற்றிபெற்றார் என்று சபை, இந்த யுகத்திலும் வரப்போகிற யுகத்திலும், பறைசாற்றுகிறது.

நம் விருப்பங்களைத் திருப்திசெய்ய வேண்டும் என்பது மாம்சத்தில் இருக்கிற தந்திரமான, ஏறக்குறைய புலப்படாத, ஓர் ஆசை. இது நம்மில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. நம்மை நாமே பிரியப்படுத்த விரும்புகிறோமா என்றும், நாம் திருப்தி அடைய வேண்டும் என்ற எண்ணம்தான் நம்மை உந்தித்தள்ளுகிறதா என்றும் யாராவது நம்மிடம் வெளிப்படையாகக் கேட்டால், அந்தக் கேள்வியினால் நாம் ஆடிப்போவோம். நம் விழுந்துபோன சுபாவத்தின் அழகான அடுக்குகள் எல்லாவற்றையும் நாம் உரித்துப்போட்டால், மிகமிக ஆழமாக நேர்மையாகப் பார்த்தால், மாம்சம் அவ்வளவு சுலபமாக மரிக்க விரும்ப*வில்லை* என்பது தெரிய வரும். அது அங்கீகாரத்தையும், தன் திருப்தியையும் இன்னும் நாடுகிறது. காலியாக்கப்படுவதையும், ஒன்றும் இல்லாமல் இருப்பதையும் அது தவிர்க்கிறது. மாம்சத்தால் கர்த்தருடைய வேலைக்குள் புழுவைப்போல அவ்வளவு எளிதாக நுழைந்து, அந்த வேலையைத் தன் திருப்திக்கான, மகிமைக்கான ஒரு வேட்கையாகத் தவறாகப் பயன்படுத்த முடியும். ஒருவேளை, “தேவனுக்காக மாபெரும் காரியங்களைச் செய்வதற்காக” நாம் முயற்சிசெய்கிறோம். ஆனால், “இது அவருடைய வேலை, அவருடைய வேலை” என்று மக்கள் சொல்லும்போது, அதைக் கேட்பதில் நாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம்! ஒருவேளை, விசுவாசத்திற்கு ஒரு நல்ல சாட்சியை, ஒரு பெரிய நினைவுச்சின்னத்தை எழுப்ப வேண்டும் என்று நாம் முயற்சிசெய்கிறோம்––ஆனால், தந்திரமாக, அது *நம்* விசுவாசத்திற்கு ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இப்படிப்பட்ட நோயுற்ற, கோணலான காரியமே நம்மை எப்போதும் வேட்டைநாயைப்போல் துரத்திக்கொண்டிருக்கிறது, இயேசுவிடமிருந்து மகிமையைத் திருடிக்கொள்ள முயற்சிசெய்துகொண்டிருக்கிறது. இயேசு மட்டுமே மகிமைக்குப் பாத்திரர். *கிறிஸ்துவின் சரீரமே இந்தச் சிக்கலுக்கான ஒரே தீர்வு, இந்தப் பயங்கரமான நோய்க்கு ஒரே மருந்து!*

வாழ்நாள் முழுவதும் ஆராதனைகளில் கலந்துகொண்டாலும் சரி, “ஊழியம்” செய்தாலும் சரி, சுயநலமான பேராசையைத் தோற்கடிக்க அவைகளால் ஒன்றுஞ்செய்ய முடியாது. அவைகள் ஒருவேளை அதை ஊட்டிவளர்க்கவும் கூடும். ஆனால், உண்மையான ஒரு கூட்டு வாழ்க்கை வேண்டுமானால், விசுவாசிகளுடன் சேர்ந்து “ஒவ்வொரு நாளும் வெளியரங்கமாகவும், வீடுகள்தோறும்” கூட்டு வாழ்க்கை வாழ வேண்டுமானால், நாம் முற்றிலும் சிலுவையில் அறையப்பட வேண்டும். வாழ்நாள் முழுவதும் நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு சிலுவை தேவைப்படுவதுபோல் வேறெதற்கும் அதிகமாகத் தேவைப்படாது. நீங்கள் எப்போதும் இணங்கிப்போகவும், கலந்துபேசவும், கேட்கவும், பணிந்தடங்கவும், விட்டுக்கொடுக்கவும் வேண்டியிருக்கிறது. கர்த்தர் தம் விருப்பப்படி செயல்பட



வேண்டுமானால், ஆயிரக்கணக்கான காரியங்களில் நீங்கள் உங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கித்தள்ள வேண்டும். ஆனால், அதுதான் வெற்றியின், ஜெயத்தின் வழி. கிறிஸ்துவின் சரீரம், மாம்சத்தோடு இடைப்படுவதற்கான வல்லமையான தீர்வு, பிசாசின் வேலையோடு இடைப்படுவதற்கான வல்லமையான மாற்றுமருந்து, நம்மில் தேவன் வேலைசெய்வதற்கு ஆற்றல்மிக்க வழிவகை. இந்தக் காரணத்தினால்தான் விசுவாசிகளின் கூட்டு வாழ்க்கையைப் பாதிப்பதற்கு சிலுவையில் அறையப்படாத மாம்சத்தை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. சரீரம் உண்மையாகவே மாம்சத்தை விரட்டியடிக்கும்; ஆனால், மாம்சம்––அதற்கு அடைக்கலம் கொடுத்தால், அதைப் பாதுகாத்தால், சகித்துக்கொண்டால்–– சரீரத்தை விரட்டிவிடும்; அப்போது முரண்பாடு மட்டுமே எஞ்சியிருக்கும்.

### வளர்வதற்கு சரீரம் தேவை

எந்தவொரு தனிப்பட்ட நபரோ, அல்லது ஒதுங்கிப் பிரிந்திருக்கிற நபர்களாலான குழுவோ கிறிஸ்துவை முழுமையாக அறிய முடியாது. இயேசு அதை அப்படித்தான் அமைத்திருக்கிறார். வரங்களிலோ அல்லது அழைப்பிலோ அல்லது அனுபவத்திலோ பலவிதங்கள் இல்லாமல், தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் ஒரே மாதிரி இருந்தால் எப்படி இருக்கும்? கொடூரமாக இருக்கும். மனிதர்களுக்கும், மனுஷிகளுக்கும் கொடுத்த வரங்களின்மூலம் இயேசு தம்மைப் பகிர்ந்தளித்திருக்கிறார். அதன் விளைவாக நாம் ஒவ்வொருவரும் நமக்கே உரிய விதத்தில் அவரை அறிகிறோம், வெளியாக்குகிறோம். ஒவ்வொரு நபரும் மதிப்புள்ள பங்களிக்க முடியும். “ஆஹா! கர்த்தர் உனக்கு *அதைக்* காண்பித்திருக்கிறார். இந்த வகையில் நான் இதை இதற்குமுன் ஒருபோதும் பார்த்ததில்லை. இது பெரிய காரியம்,” என்று என்னால் சொல்ல முடியும். “நல்லது. இந்தக் காரியம் எனக்கு ஒருபோதும் தோன்றவில்லை; ஆனால், கர்த்தருக்கு நன்றி! அதிலிருந்து நான் பயனடைய முடியும்,” என்று உங்களால் சொல்ல முடியும். எனவே, கிறிஸ்துவை முழுமையாக உணர்ந்தறிய முழுச் சரீரம் தேவைப்படுகிறது. “*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக்* கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்தறிய வல்லமை பெற வேண்டும்,” என்பது பவுலின் ஜெபம். தேவனுடைய சத்தியங்களைக் கிரகித்துக்கொள்ள சகல பரிசுத்தவான்களும் தேவைப்படுகிறார்கள். ஆவிக்குரியவழியில் நாம் மற்றவர்களுடன் தொடர்பில்லாதவர்களாகவும், ஒதுங்கியிருப்பவர்களாகவும், பிரிந்திருக்கிறவர்களாகவும் இருந்தால், இப்படிப்பட்ட மிகப் பெரிய பொக்கிஷத்தை நாம் இழந்துவிடுகிறோம்.

நம் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சரீரம் தேவை. “கிறிஸ்துவே தம் சரீரமாகிய சபையின் தலை. அவருடைய இயக்கத்தினால், சரீரம் முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்யும்போது, அது மற்ற அவயவங்கள் வளர்வதற்கு உதவிசெய்கிறது; அப்போது சரீரம் முழுவதும் ஆரோக்கியமாக இருக்கிறது, வளர்கிறது, அன்பினால் நிறைந்திருக்கிறது,” என்றும் பவுல் எழுதினார் (எபேசியர் 4:15-16). நீங்களும் நானும் தனித்தனியாகக் கிறிஸ்துவினுடைய வளர்த்தியின் நிறைவான அளவை ஒருபோதும் எட்டமாட்டோம். தனிப்பட்ட முறையில் நான் அந்த அளவை எட்டுவேன் என்று இயேசு எனக்கு ஒருபோதும் வாக்குத்தத்தம்பண்ணவில்லை. ஆனால், சரீரத்தின் ஓர் அவயவம் என்ற முறையில், மற்ற எல்லாரோடும் சேர்ந்து நான் அவருடைய

நிறைவை அடைய முடியும். இதற்கு எல்லாரும் தேவை. எந்த அளவுக்கு நான் துண்டிக்கப்பட்டிருக்கிறேனோ, அந்த அளவுக்கு நான் மட்டுப்படுத்தப்படுகிறேன். எந்த அளவுக்கு நான் சரீரத்தோடு ஐக்கியம்கொள்கிறேனோ, அந்த அளவுக்கு நான் விசாலமடைகிறேன். இந்தக் கோட்பாட்டுக்கு விரோதமாக நான் யுத்தம் செய்ய முயற்சிசெய்தால், இதை நிறுவிய இயேசுவுக்கு விரோதமாக நான் யுத்தம் செய்கிறேன் என்று பொருள்.

கிறிஸ்துவை வெளியாக்குகிற காரியத்துக்கும் இது பொருந்தும். துண்டிக்கப்பட்ட நிலையில், எதிரியோடு யுத்தம்செய்ய முடியும் என்ற எந்த நம்பிக்கையும் என்னிடத்தில் இல்லை. ஆனால், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒரு சிறிய வெளியாக்கம் இருந்தாலுங்கூட, அங்கு பெரிய நம்பிக்கை உண்டு. இரண்டு அல்லது மூன்று பேர் இயேசுவின் பெயரில் கூடிவரும்போது, அவர் அங்கு இருக்கிறார். இரண்டு அல்லது மூன்றுபேர் எதில் ஒருமனப்பட்டிருக்கிறார்களோ, அதை அவர் செய்கிறார். இரண்டு அல்லது மூன்றுபேர் ஒரு காரியத்துக்குச் சாட்சியாக இருக்கும்போது, அது நிறுவப்பட்டுவிட்டதாக இயேசு கருதுகிறார். கூட்டான ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குக் கர்த்தருடைய குறைந்தபட்சத் தேவை ஒருவர் அல்ல, *இரண்டுபேர்*. இந்தக் காரணத்தினால்தான், தனியாக இருக்கும்போது நாம் பெரும்பாலும் ஒரு தேக்கநிலையில் இருக்கிறோம். கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ளாதவரை, முயற்சிசெய்து அந்த நிலையை விட்டு வெளியே செல்ல முடியும் என்ற எந்த நம்பிக்கையும் இல்லாததுபோல் தோன்றுகிறது. *சரீரத்தில் வெளியரங்கமாக்கப்படுவதுபோல்*, இயேசுவைப்பற்றிய உண்மையான வெளிப்பாட்டில், கர்த்தருடைய பிள்ளைகளைப் பெருவாரியாகவும், நிறைவாகவும் பெற முடிந்தால், அப்போது எதிரிக்கு விரோதமாகவும், மனிதர்களுக்கு முன்பாகவும் கிறிஸ்துவின் தாக்கம் எவ்வளவு வல்லமையாக இருக்கும்! இப்போதும், வரப்போகிற யுகத்திலும், கிறிஸ்துவை முழு அளவில் வெளியரங்கமாக்குவதற்கு சரீரம் நிச்சயமாகத் தேவைப்படுகிறது. கிறிஸ்து தலையாக இருக்க வேண்டுமானால், சரீரம் தேவைப்படுகிறது. தொடர்பற்ற பல தனி நபர்கள் அல்ல, மாறாக ஒரு சரீரம்.

## தனித்துவம் மட்டுப்படுத்துதலும், பலவீனமுமாகும்

சுயாதீனமான எண்ணத்தாலும், செயலாலும் அதிகமாகச் சாதிக்க முடியும் என்பது போல் தோன்றலாம். இருந்தபோதும், சுயாதீனத்தால் தேவனுடைய வேலையை ஒருபோதும் சாதிக்கமுடியாது என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். ஒருவேளை, சுயாதீனம் ஒரு பரந்த இடத்தை அடையலாம்; ஆனால், அது அதிக ஆழமோ அல்லது நிஜமோ இல்லாத, மேலெழுந்தவாரியான ஒன்றாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குத்தான் அது தேவனோடு சேர்ந்துசெல்லும்; அதற்குமேல் அது போகாது. அது ஒருவேளை மனமாற்றம் என்ற கட்டத்தை எட்டக்கூடும். ஆனால், மனமாற்றம் தேவனுடைய ஆரம்பம் மட்டுமே. அது அவருடைய இலக்கு அல்ல. ஒருவன் மெய்யாகவே மனந்திரும்பி இயேசுவிடம் வரும்போது நாம் களிகூருகிறோம் என்பதைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். ஆனால், சோகம் என்னவென்றால், கர்த்தரிடத்தில் வந்திருக்கிறேன் என்று சொல்லுகிற பலர் தொடர்ந்து செல்லவில்லை. அவர்கள் அங்கு தங்கிவிட்டார்கள் அல்லது அதைவிட மோசமாக, அவர்கள் பின்வாங்கிப்போய் இயேசுவின் இரத்தத்தைக் காலின்கீழ் மிதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். குறைந்த பட்சம், பிரச்சினையின் ஒரு பகுதி அவர்கள் பெற்றுக்கொண்ட சுவிசேஷத்தில் இருக்கிறது.



இரட்சிக்கப்பட வேண்டும் என்ற அழைப்பை அவர்கள் கேட்டார்கள். ஆனால், இயேசு முதன்மையான, இறையாண்மையுள்ள கர்த்தர், தலை என்ற தெளிவான பறைசாற்றுதலை அவர்கள் ஒருபோதும் கேட்டதில்லை. அவருடைய இறையாண்மையைப்பற்றிய வெளிப்பாட்டை அவர்கள் நிச்சயமாகத் தங்கள் இருதயத்தில் ஒருபோதும் பெற்றுக்கொள்ளவில்லை. நிறைய வேலைகளைச் செய்யலாம்; வெளிப்படையாகக் கனிகளும் இருக்கலாம். அதில் சிலவற்றுக்கு, ஒருவேளை, கொஞ்சம் மதிப்பும் இருக்கலாம். ஆனால், அது மட்டுப்படுத்தப்பட்டதாகத்தான் இருக்கும் என்பது மாறாது, தவிர்க்க முடியாது. தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையோ அல்லது வேலையோ அல்ல, மாறாக கிறிஸ்துவின் சரீரமே அவருடைய நிறைவின் அடையாளமாகும் என்பதைப் பார்க்க நாம் தொடர்ந்துசெல்ல வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சரீரத்தில் வாழாவிட்டால், அங்கு பலவீனமும், மட்டுப்படுத்துதலும் மட்டும் அல்ல, தவறு செய்வதற்கான வாய்ப்பும் இருக்கும். இதை நாம் மீண்டும் மீண்டும் பார்க்கவில்லையா? போதனைகள் தவறாக நடத்துகின்றன அல்லது குழப்புகின்றன; மக்கள் தங்கள் நிலையை அல்லது தாங்கள் சொல்லியதை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது; தங்களைத் தீர்க்கதரிசிகள் என்று பிரகடனப்படுத்திக்கொண்டவர்களுடைய தீர்க்கதரிசனங்கள் தவறாகப் போயிருக்கின்றன—அவர்கள் செயல்பட்ட விதத்தில் சுயாதீனமான, தனித்துவமான ஏதோவொன்று இருந்ததுதான் இதற்குக் காரணம். அதிலிருந்து நம்மைப் பாதுகாக்க கிறிஸ்துவின் பரிசுத்தவான்களுக்கிடையே அவருடைய தலைமைத்துவத்தின் மூடுதல் தேவைப்படுகிறது. இதற்கு விதிவிலக்குகளோ, விசேஷமானவர்களோ கிடையாது. தேவனுடைய வார்த்தையை நாம் உண்மையென்று ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நம் தோல்வியினால் அது உண்மையென்று நாம் நிரூபிக்கலாம். கர்த்தருக்குள் வாழும் வாழ்க்கையிலும், கர்த்தருக்காகச் செய்யும் சேவையிலும் தனிப்பட்ட சுயாதீனம் இருந்தால் முந்தியோ அல்லது பிந்தியோ மட்டுப்பாடு, முரண்பாடு, குழப்பம் என்ற நிலைக்கு அது வரும்.

கர்த்தரிடமிருந்து ஒழுங்கான வழிநடத்துதலைப் பெற அவருடைய வீட்டில் விசாரித்துக்கேட்பதே எப்போதும் வழியாக இருந்திருக்கிறது. சுயாதீனமான வழிநடத்துதலைப் பெற நீங்கள் முயற்சிசெய்யலாம்; ஆனால், குழப்பம்தான் மிஞ்சும். நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்றும், எது சரியென்றும் நீங்கள் அறியமாட்டீர்கள். இயேசு உங்களை அதிகமாக நேசிக்கிறார்; எனவே, நீங்கள் உங்களுக்குத் தானே ஒரு தீவாக இருக்க முடியும் என்று வஞ்சகமாக நினைக்கச்செய்கிற ஒரு பதிலை அவர் உங்களுக்குத் தரமாட்டார். அவருடைய பதில்கள் அவருடைய முக்கியமான குறிக்கோளின் தடத்தில் உங்களைக் காத்துக்கொள்ளும் முறையில் வரும். உங்கள் இருதயத்தைக் கர்த்தருடைய பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ளுங்கள். அவருடைய சேவையின் வேலையைச் செய்ய உங்களைத் தரிப்பிக்க கர்த்தர் உங்களுக்கு வரங்களாகக் கொடுத்திருப்பவர்களை உள்ளே கொண்டுவாருங்கள். திரளான ஆலோசனைக்காரர்களிடத்தில், நீங்கள் ஞானத்தைக் கண்டடைவீர்கள். நாம் தேவனுடைய வழியைப் பின்பற்றும்போது, தெளிவு பிறக்கிறது.

இயேசுவின் இடத்தை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு சரீரத்தை உயர்த்த நாம் முயற்சிசெய்யவில்லை. பாதுகாப்பாக இருக்கவும், வழிநடத்துதலைப் பெறவும், நிறைவை அனுபவிக்கவும், சரீரத்தின் தலையாகிய கிறிஸ்து நம்மை அவருடைய

தலைமைத்துவத்தின்கீழ் கொண்டுவருகிறார் என்பதை நாம் பார்க்க வேண்டும். நாம் வெறுமனே தனிப்பட்ட அலகுகள் அல்ல, மாறாக சரீரத்தின் அவயவங்கள் என்பதை நாம் உணரவேண்டும். இயேசு என்னவாக இருக்கிறாரோ அவையெல்லாவற்றையும் அனுபவித்துமகிழ, நாம் ஒருவகையான தொடர்பற்ற வாழ்க்கை வாழ்வதால் அல்ல, மாறாக சகல பரிசுத்தவான்களோடும் கொள்ளும் ஐக்கியத்தில், அவர் அவர்களுக்குத் தலை என்றும், இறையாண்மையுள்ளவர் என்றும் நாம் கண்டிப்பாக அறிய வேண்டும். இயேசுவின் முழு ஆதரவை நாம் விரும்புகிறோமா? சுயாதீனமாக அல்ல, மாறாக உறவுமுறையில் நாம் அதைப் பெறுவோம். சுயாதீனமாக இருக்க வேண்டும் என்ற நம் ஆசையை விட்டுவிட்டு, சுயத்தை சிலுவையில் அறைய தேவன் நமக்குக் கிருபை தருவாராக; அப்போது, நாம் அவருடைய இறையாண்மையின்கீழ் வாழக் கொண்டுவரப்பட்டு, அவரை முதன்மையானவராகக் கண்டுகொள்வோம்.

## IV. கிறிஸ்து "பிரபஞ்சத்திலுள்ள சகல ஆட்சியாளர்களுக்கும் , அதிகாரம் கொண்டோர்களுக்கும் கர்த்தர்"

### கொலோசெயர்களின் பெரிய தவறு

இயேசு "பிரபஞ்சத்திலுள்ள சகல ஆட்சியாளர்களுக்கும், அதிகாரம் கொண்டோர்களுக்கும் கர்த்தர்" என்றும், அவர் "நம்மை இருளின் இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்கிறவனிடமிருந்து விடுதலையாக்கியிருக்கிறார்" என்றும் பவுல் கொலோசெயர்களுக்கு எழுதினார். பவுல் சொல்வதை இன்னும் நல்ல முறையில் புரிந்துகொள்ள, கொலோசெவில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை மேலிருந்து பார்க்க வேண்டும்; அப்போது, அவர் கொலோசெயர்களுக்கு ஏன் இவ்வாறு நினைப்பூட்ட வேண்டியிருந்தது என்பது தெளிவாகும்.

ஒரு பொய்யான போதனை−−இயேசுவை மையநிலையிலிருந்தும், முதன்மைநிலையிலிருந்தும் கீழே இறக்கிக்கொண்டிருந்த ஒரு போதனை−−கொலோசெவில் நிலைகொள்ள முயன்றுகொண்டிருந்தது. அது யூதமதமும், உலகப் பிரகாரமான கிரேக்க தத்துவமும் கலந்த ஒரு கலவை. அது, பெரும்பாலும், இயற்கைக்கு அப்பாற்பட்டவர்களை வரிசைப்படுத்துவதோடு சம்பந்தப்பட்டிருந்தது. அந்த வரிசையில், "ஏறக்குறைய தேவன்" உச்சியில் இருந்தார்; மனிதன் அடிமட்டத்தில் இருந்தான். ஆட்சியாளர்களும், அதிகாரம்கொண்டோர்களும், தூதர்களும், பிரதான தூதர்களும் இந்த அமைப்புமுறையில் இருந்தார்கள். இயேசுவும் இந்த நீண்ட பட்டியலில் வெறுமனே ஒருவராகக் கருதப்பட்டார்; ஒருவேளை உச்சியில் இருந்தார்; ஆனாலும், அவர் இன்னும் தூதர்களில் ஒருவராகத்தான் கருதப்பட்டார். மக்கள் தூதர்களை ஆராதிக்கத் தொடங்கியிருந்தார்கள். இந்தக் காரணத்தினால்தான், "நீங்கள் தூதர்களை ஆராதிக்க வேண்டும் என்று சொல்ல ஒருவனையும் அனுமதிக்க வேண்டாம். இதைப்பற்றிய தரிசனங்களைக் கண்டதாக அவர்கள் சொன்னாலுங்கூட அதை நம்ப வேண்டாம். இந்த மக்கள் மிகத் தாழ்மையானவர்கள்போல் காட்டுகிறார்கள். ஆனால், அவர்களுடைய பாவமான மனங்கள் அவர்களைப் பெருமைக்காரர்களாக்கிவிட்டது" (கொலோசெயர் 2:19) என்று பவுல் அவர்களை எச்சரிக்க வேண்டியிருந்தது.

இந்தப் புதிய போதனை மிக நல்ல போதனைபோல் *தோன்றியது.* அது ஆராதனையையும், தாழ்மையையும், கண்டிப்பான சுய-கட்டுப்பாட்டையும் வலியுறுத்தியது. இவைகளைப்பற்றி யாராவது வாக்குவாதம்செய்ய முடியுமா? அது மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து யூதமதத்தின் சடங்குகளையும், பழக்கங்களையும் உள்ளே கொண்டுவந்தது. அந்தச் சடங்ககுகளையெல்லாம் தேவனே நிறுவவில்லையா? இந்தப் புதிய போதனை இயேசுவை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்தது. எனவே, இந்தப் போதனை நிச்சயமாக ஒரு புதிய வெளிப்பாடாகத்தான் இருக்க வேண்டும்! அப்போது பவுல் தைரியமாக உள்ளே நுழைந்து, அது முற்றிலும் தவறு என்று கூறினார். அந்தப் போதனையினுள் இருந்த ஆழமான, இருண்ட, பேய்த்தனமான காரியத்தை அவர் அம்பலப்படுத்தினார். கிறிஸ்தவம் என்ற பெயரில் நடக்கிற ஏதோவொன்றை ஆதரித்து வளர்க்க சாத்தான் எவ்வளவு தூரத்துக்கு வேண்டுமானாலும் செல்வான். கிறிஸ்தவம் என்ற மதம் மக்களை நாணயமானவர்களாகவும், பயபக்தியுள்ளவர்களாகவும், மதப்பற்று உள்ளவர்களாகவும், பார்ப்பதற்கு ஆவிக்குரியவர்களாகவும் மாற்றினாலும், அவன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தேவனுடைய வலப்பக்கத்தில் இருக்கும் இயேசுவை சிங்காசனத்திலிருந்து எப்படியாவது இறக்க வேண்டும் என்ற தன் குருட்டுத்தனமான பேராசையைப்பற்றி மட்டுமே சாத்தான் கவலைப்படுகிறான். இதைக் கலகம் செய்து சாதிக்க முடியாவிட்டால், மதத்தின்மூலம் சாதிக்க முயற்சிசெய்வான். பரம்புதிரான, ஆத்துமரீதியான "கிறிஸ்தவத்தில்" ஒழுக்கத்தின் உயர்ந்த தரம் இருந்தாலுங்கூட, அது இயேசுவை அவருக்குரிய இடத்திலிருந்து இறக்கிவிட்டால், அவன் அதைக் கண்டுகொள்ளவே மாட்டான்.

இந்தப் பொய்யான ஆவிக்குரியதன்மையை அம்பலப்படுத்தவே பவுல் கொலோசெயர்களுக்கு நிருபம் எழுதினார். இயேசு வெறுமனே பிரதான தூதன் அல்ல என்று அந்த நிருபத்தில் பவுல் பறைசாற்றினார். அவர் தேவனுடைய அன்பின் குமாரன்; அவர் தேவத்துவத்தில் பிதாவோடு நித்தியமாக ஒன்றாக இருக்கிறார். தேவத்துவத்தின் நிறைவு சரீரப்பிரகாரமாக இயேசுவில் வாழ்ந்தது.

கடைசிக் காலத்தில் வாழும் நமக்கு இந்த வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. பவுல் கொலோசெயர்களுக்கு எழுதியதை இன்று கிறிஸ்தவத்தில் இருக்கிற பிரபலமான பல இயக்கங்களுக்கு நீங்கள் பிரயோகிக்கலாம். பிரபலமான ஒரு போதனையோ அல்லது ஸ்தாபனமோ விசுவாசியின் இருதயத்திலும், வாழ்க்கையிலும் இயேசுவை ஒப்புயர்வற்ற முதன்மையான கர்த்தராக சிங்காசனத்தில் அமர்த்துகிறதா அல்லது அதைவிடக் கீழான இடத்துக்கு அவரை இறக்குகிறதா−−ஒருவேளை உயர்ந்த இடமாகக்கூட இருக்கலாம், ஆனால் முதன்மையான இடத்தைவிடக் கொஞ்சம் குறைவான இடம். அது இயேசு கிறிஸ்துவை கீழ்ப்படிதலோடு ஆராதிப்பவர்களை உற்பத்திசெய்கிறதா அல்லது அது மக்களை வெறுமனே இன்னும் கொஞ்சம் ஒழுக்கமுள்ளவர்களாகவும், மதப்பற்றுள்ளவர்களாகவும் ஆக்குகிறதா? இயேசுவே ஜீவிக்கும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற உண்மையான, தேவன் தந்த, நிச்சயம் எந்த அளவுக்கு நம் இருதயத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் ஒரு காரியம் செல்லுபடியாகும்.

### இயேசு முதன்மையானவர் என்று அவருடைய வேலை காண்பிக்கிறது

தூதர்கள், பிரதான தூதர்கள், ஆட்சியாளர்கள், அதிகாரம் கொண்டோர்கள் ஆகிய எல்லாவற்றிலுமிருந்தும் இயேசு எப்படி வேறுபட்டவர்? அவைகள் எல்லாவற்றையும்விட அவர் எப்படி உயர்ந்தவர்? அவருடைய முதன்மையானதன்மை அவ

ருடைய வேலையில் காணப்படுகிறது. “அவர் நம்மை இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தி யிருக்கிறார்” (கொலொசெயர் 1:13). பரலோகத்தில் அல்லது பூமியில் இருக்கிற வேறெவரும் இப்படி உரிமைபாராட்ட முடியாது, அல்லது “ஆட்சியாளர்களையும், அதிகாரம்கொண்டோர்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோல மாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றிசிறந்தார்” (கொலோசெயர் 2:15) என்ற உரிமையும் கோர முடியாது. ஆவிக்குரிய மண்டலம் முழுவதிலும் அவருக்கு எதிராக நின்ற எல்லா அதிகாரங்களிலிருந்தும் வல்லமையை உரிந்துகொள்ளும் அந்த வேலையை எந்தப் பிரதான தூதனும் செய்யவில்லை. இராஜ்ஜியம் இயேசு வுக்குச் சொந்தம். ஏனென்றால், பலவந்தம் செய்துதான் அவர் அதை எடுத்துக் கொண்டார். உன்னதங்களிலுள்ள எல்லாக் கண்களும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, பொல்லாத சேனைகளை கிறிஸ்து எதிர்கொண்டு, அவைகளின் மேல் வெற்றிசிறந்தார். வாரிசு என்ற முறையில் அவருடைய உரிமைகளை எடுத் துக்கொள்ள விரும்பின ஒவ்வொருவரையும் அவர் தோற்கடித்தார். இயேசு வல்லமைமிக்க ஒரு வெற்றிவீரர். சிலுவை அவருடைய இரத்தம்தோய்ந்த போர்க்களம்.

தேவனுடைய அன்பின் குமாரன் தேவனுக்குச் சமமான இடத்திலிருந்து கீழே இறங்கிவருவதை——கீழே, கீழே, முற்றிலும் தம்மை வெறுமையாக்கும்வரை கீழே ——பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். “மரணபரியந்தம், அதா வது சிலுவை மரணபரியந்தம் அவர் கீழ்ப்படிந்தார்.” “சிலுவை பரியந்தம்” என்று பவுல் கூறினார். மனிதர்களின் பார்வையில் அது ஒரு கனமான, மகிமையான மரணம் அல்ல. “அதனால்”——இந்தக் காரணத்தினால், இதன் காரணமாக, இதனால், சிலுவை மரணத்தினிமித்தம்——“தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண் ணும்படிக்கும், எல்லாவற்றிற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (பிலிப்பியர் 2:9-11). இயேசு என்ன செய்திருக்கிறாரோ, அதன் காரணமாக அவர் முதன்மைநிலைக்குத் தகுதியானவர். அவருடைய வேலை தன்னிகரற்றது.

### இந்த முதன்மைநிலையில் நம் இடம்

கிறிஸ்துவின் மேன்மையையும், அவருடைய வேலையையும் பார்க்கும்போது நம் இருதயங்கள் தானாகவே இளக வேண்டும். ஆனால், அவருடைய வேலையெல் லாம் *நமக்காகவே* என்பதை நாம் உணரும்போது, நம் இருதயத்தின் மறுமொழி இன்னும் எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டும்!

“நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண் ணப்பட்டீர்கள். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவனுடைய சத்துவத்தின் வல்லமையை நீங்கள் விசுவாசித்ததால், அவரோடேகூட ஒரு புதிய வாழ்க்கைக்கு எழுப்பப்பட்டீர்கள். உங்கள் பாவங்களின் காரணமாகவும், உங்கள் பாவ சுபாவம் இன்னும் விருத்தசேதனம்பண்ணப்படாததாலும், நீங்கள் மரித்தவர்களாயிருந் தீர்கள். அப்போது, தேவன் உங்களைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். அவர் நம் சகல பாவங்களையும் மன்னித்தார்” (கொலோசெயர் 2:12-13).



“நீங்கள் கிறிஸ்துவுடன்கூட ஒரு புதிய வாழ்க்கைக்கு எழுப்பப்பட்டிருப்பதால், கிறிஸ்து கனத்தோடும், வல்லமையோடும் தேவனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக் கும் பரலோகத்தின் நிஜங்களின்மேல் உங்கள் மனதைச் செலுத்துங்கள். பர லோகம் உங்கள் எண்ணங்களை நிரப்புவதாக. இங்கு கீழே பூமியில் உள்ள காரி யங்களைப்பற்றி மட்டும் சிந்திக்க வேண்டாம். ஏனென்றால், கிறிஸ்து மரித்தபோது நீங்கள் மரித்தீர்கள். உங்கள் உண்மையான ஜீவன் கிறிஸ்துவுடனே தேவ னுக்குள் மறைந்திருக்கிறது. உங்கள் உண்மையான ஜீவனாகிய கிறிஸ்து முழு உலகத்துக்கும் வெளிப்படும்போது, நீங்கள் அவருடைய எல்லா மகிமையிலும் பங்கடைவீர்கள். எனவே, உங்களுக்குள் பதுங்கியிருக்கும் பாவமான, பூமிக்குரிய காரியங்களை மரணத்துக்குள்ளாக்குங்கள்... ஒருவருக்கொருவர் பொய் சொல்லா திருங்கள். ஏனென்றால், நீங்கள் உங்கள் பொல்லாத பழைய சுபாவத்தையும், அதின் தீமையான சகல செயல்களையும் களைந்துவிட்டீர்கள். அதற்குப்பதிலாக, அதின் இடத்தில், இந்தப் புதிய சுபாவத்தை உங்களுக்குள் சிருஷ்டித்த கிறிஸ்து வைப்பற்றி நீங்கள் மேன்மேலும் கற்றுக்கொள்கையில், தொடர்ச்சியாகப் புதிதாக் கப்பட்டுக்கொண்டிருக்கிற புத்தம்புதிய சுபாவத்தை உடுத்திக்கொண்டீர்கள்” (கொலேசெயர் 3:1-5, 9-10).

இயேசு செய்ததின் நன்மையை அனுபவிக்க, அவருடைய வேலையின் முழு விளைபயனை——இருண்ட மண்டலத்திலுள்ள சகல ஆட்சியாளர்கள்மேலும், அதிகாரம் கொண்டோர்கள்மேலும் அவர் பெற்ற முழுமையான வெற்றியை—— நாம் நினைக்க வேண்டும். நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதும், நரகத்துக்குத் தப்பிப் பரலோகத்திற்குச் செல்வதும் பெரிய ஆசீர்வாதங்கள். அவைகளின் முக்கியத்துவத்தை நாம் குறைத்துமதிப்பிடக்கூடாது. ஏனென்றால், மட்டற்ற விலைகொடுத்து அவைகள் நமக்காக வாங்கப்பட்டன. ஆனால், மன்னிக்கப்பட்ட திலேயே நாம் நின்றுவிடக் கூடாது. இரட்சிப்பில், சத்துருவாகிய சாத்தான் மற்றும் இருண்ட சக்திகளின் சகல அதிகாரத்தையும், ஆட்சிபரப்பையும் இயேசு அழித்து விடுகிறார். அவர் நம்மைத் தம் சிலுவையில் காப்பாற்றுகிறார். பிசாசுக்கு இனி நம்மேல் எந்த அதிகாரமும் கிடையாது. ஏனென்றால், அவனுக்கு நம்மேல் இருந்த சட்டப்படியான பிடி அழிந்துவிட்டது. சாத்தானுக்கு நம்மேல் இருக்கும் வல்லமை அவனுக்கு நம்மேல் இருக்கும் உரிமைகளைச் சார்ந்திருக்கிறது; அவனுடைய உரிமைகளுக்கு நம் இருதயங்கள் என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதே ஆதாரம். சிலுவை பழைய மனிதனைச் சாகடித்து, புதிய மனிதனை உருவாக்கி நம் இருதயங்களுடன் இடைப்படுகிறது; அது எதிரியிடமிருந்து எல்லா உரிமை களையும் உரிந்துகொள்கிறது.

கிறிஸ்து சாத்தான்மேல் வெற்றிபெற்றார். அவர் வெற்றியின் *மனுவுருவம்*. அவர் சொன்னதுபோல, “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். ஆனால், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை.” நாம் விசுவாசிக்கும்போது கிறிஸ்து நம்மில் இருக்கிறார். எதிரி நிற்பதற்கு கிறிஸ்துவில் தளம் எதுவும் இல்லையென்றால், நம்மில் நிற்பதற்கும் அவனுக்குத் தளம் எதுவும் இல்லை. “தேவன் தமக்காகத் தெரிந்துகொண்ட நம்மேல் யாரால் குற்றஞ்சாட்ட முடியும்? தேவனா? இல்லை. அவரே நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார். நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்து இயேசுவா? இல்லை. ஏனென்றால், அவரே நமக்காக மரித்தவர்; அவரே நமக்காக உயிரோடு எழுப்பப்பட்டவர்; அவரே நமக்காகக் பரிந்துபேசியவாறு தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறவர்” (ரோமர் 8:33-34).

குற்றஞ்சாட்டுகிறவன் வந்து, நமக்கு எதிராகக் குற்றஞ்சாட்ட முயன்றால், நாம் அவனுக்கு எப்படிப் பதில் சொல்வோம்? "இயேசு எங்களுக்காக மரித்து, எங்களுக்காக உயிரோடெழுப்பப்பட்டார்," என்பதே நம் வல்லமையான பதில். நீங்களும் நானும், நாமாகவே, நம்மில்தாமே, எதிரியை ஒருபோதும் எதிர்கொள்ள முடியாது. ஆனால், நாம் அவனுக்குக் கிறிஸ்துவைக் காட்டினால், அவனால் என்ன செய்ய முடியும்? அவனுக்கு இயேசுவினிடத்தில் ஒன்றும் இல்லை. இயேசுவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் அவனுடைய வல்லமையும், அதிகாரமும் அழிக்கப்பட்டன. இதை தேவன் வழங்கியிருக்கிறார். இதைப்பற்றிய முழுமையான வெளிப்பாட்டை நாம் பார்த்தால் போதும்; அப்போது, நாம் வெற்றிபெறுவதற்கான வழியைக் கண்டுகொள்வோம்.

*இன்னும் கொஞ்சம் "அதிக நல்லவர்களாக" இருப்பதற்காக நாம் போராடுகிற போராட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஒருபோதும் உதவுவதில்லை.* நம்மை முன்னேற்றுவதற்காக நாம் சதாகாலமும் போராடிக்கொண்டேயிருக்கலாம்; முன்னேற வேண்டும் என்று இன்னும் முயற்சிசெய்துகொண்டிருக்கும்போதே மரித்தும்போவோம். இரட்சிக்கப்படுவதற்காக அல்லது பரிசுத்தமாக்கப்படுவதற்காக நாம் பிரயாசப்பட்டு முயன்றுகொண்டிருந்தால், பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்ய மாட்டார். பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கிறிஸ்துவை வெளிப்படுத்தி, நாம் அவரை நம் இரட்சிப்பாகவும், பரிபூரணமாகவும் உறுதியாகப் பற்றிக்கொள்ள நமக்கு உதவுவார். "நம்மிடம் இவ்வளவு தவறுகள் இருக்கின்றன. நம்மைப்பற்றிய உண்மைநிலையைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்ளவா முடியும்?" என்று நீங்கள் கேட்கக்கூடும். இல்லை. உங்கள் கண்களை இயேசுவைப் பார்க்கத் *திறக்க* வேண்டும். *முழுக் கவனத்தையும் சுயத்தின்மேல் செலுத்துவது சுயத்தைக் குணப்படுத்துவதற்கான மருந்து அல்ல.* தேவனுடைய பரிபூரணமான வழங்கீடாகவும், தேவனுடைய திருப்தியாகவும், நம் விடுதலையாகவும் இருக்கிற இயேசுவின்மேல் நாம் நம் கண்களைப் பதிக்க வேண்டும்.

"நான் என்னவாக இருக்கிறேன் என்பதல்ல, கர்த்தாவே, நீர் என்னவாக இருக்கிறீர் என்பதே காரியம். என் பழைய பாவ சுபாவத்தைப் பொறுத்தவரை, நான் முழுக்க முழுக்க அழுகிப்போனவன் என்று எனக்குத் தெரியும். ஆனால், கர்த்தாவே, நீரே என் இரட்சிப்பு. நீரே என் நீதி. நீரே என் பரிசுத்தம், நீரே என் தூய்மை. நான் உம்மைப் பற்றிக்கொள்வேன்." நாம் கிறிஸ்துவின் மதிப்பை அறிய வேண்டும் என்பதே பரிசுத்த ஆவியானவருடைய இலக்கு; ஏனென்றால், இது மட்டுமே நம் ஒரே நம்பிக்கை.

**கிறிஸ்துவே பாவிக்கான வழி**

நிர்ப்பந்தமான ஒரு மனிதனின் கதறலைக் கேளுங்கள்: "எந்தப் பக்கம் திரும்பினாலும் சரி, என்னால் சரியானதைச் செய்ய முடியவில்லை. நான் சரியானதைச் செய்ய விரும்புகிறேன். ஆனால், என்னால் செய்ய முடியவில்லை. நான் நன்மைசெய்ய விரும்பும்போது, நான் நன்மைசெய்வதில்லை. தவறு செய்யாமல் இருக்க நான் முயலும்போது, நான் தவறுசெய்துவிடுகிறேன்."மேலும் கீழும் தூக்கிப்போடுகிற, ஏற்ற இறக்கம் நிறைந்த, வாழ்க்கையில் கடைசியாக அவன், "ஆ! நான் எவ்வளவு பரிதாபமானவன்! பாவம் ஆதிக்கம்செலுத்துகிற இந்த வாழ்க்கையிலிருந்து யார் என்னை விடுவிப்பார்? தேவனுக்கு நன்றி! பதில் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது," என்று கதறுகிறார்.



நிர்ப்பந்தமான இந்த மனிதன் விடுதலை பெறுவதற்கு என்ன வழி? அவனுடைய கடும் பிரயாசம் அல்ல. "நான் இன்றைக்குக் கொஞ்சம் சிறந்தவனாக இருக்கப்போகிறேன்" என்ற அவனுடைய தீர்மானங்கள் அல்ல. மீண்டும் தோற்றுப்போனதால் அந்த நாளின் கடைசியில் அவனுக்கு ஏற்படும் ஏமாற்றம் அல்ல. இல்லை. விசுவாசத்தால் இயேசுவை உறுதியாய்ப் பற்றிக்கொள்வதே வழி, வெற்றியின் தளம். தேவன் தம் குமாரனைக் கனப்படுத்துகிறார். நாம் தேவனுடைய குமாரன் மேல் வைத்திருக்கும் நம் விசுவாசத்தை அவர் கனப்படுத்துகிறார். "அவரே நமக்காக மரித்தவர்; அவரே நமக்காக உயிரோடு எழுந்தவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." "மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவே...சகல ஆட்சியாளர்களுக்கும், அதிகாரம்கொண்டோர்களுக்கும் தலையாயிருக்கிறார்." இரட்சிக்கப்படாதவர்களுக்கு இவைகளெல்லாம் மிகவும் அவசியமான உண்மைகள். இந்தச் சத்தியங்களைப்பற்றிய உண்மையான வெளிப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு மனந்திரும்பியவர்கள் தொடக்கத்திலிருந்து பலமாக இருக்கிறார்கள்.

இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பூரணமாகப் பறைசாற்றுவோமாக! சுவிசேஷத்தைக் கேட்பவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் மரிக்கும்போது நரகத்துக்குப் போவதற்குப் பதிலாக பரலோகத்துக்குப் போகலாம் என்று மட்டுமே நாம் அறிவித்தால், நாம் சுவிசேஷத்திற்கும், அதைக் கேட்பவர்களுக்கும் அநியாயம் செய்கிறோம். கிறிஸ்துவைப்பற்றிய உண்மையான வெளிப்பாடு இருந்தால், அதோடுகூட மற்றவர்களிடமிருந்து ஒவ்வொருநாளும் உண்மையான உற்சாகம் கிடைத்தால், வழக்கமான வேகம் என்று பெரும்பாலானோர் கருதுவதைவிட அதிக வேகத்தில் மக்கள் முதிர்ச்சியடைவார்கள். "கூட்டங்களும்," "மாநாடுகளும்" எவ்வளவுதான் நல்ல நோக்கம் உடையவைகளாக இருந்தாலும் சரி, அவைகளால் செய்ய முடியாததை, பரலோகம் அனுப்பும் வெளிப்பாடும், பரலோகம் ஆற்றலளிக்கும் ஐக்கியமும் செய்யும்.

இந்தச் சத்தியங்களை அறிவியுங்கள். நீங்கள் பிரபலமாகமாட்டீர்கள். நரகம்கூட உங்களை எதிர்க்கும். கிறிஸ்தவத் தலைவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிற அநேகருங்கூட உங்களுக்கு விரோதமாக எழும்புவார்கள். ஆனால், இவைகளை நீங்கள் கண்டிப்பாக அறிவித்தாக வேண்டும்.

"அஞ்ஞான" தேசத்திற்குச் செல்லும் "மிஷனரிகள்" (இறைபணியாளர்கள்) மனந்திரும்புபவர்களைக்குறித்து கவலைப்படுகிறார்கள். இந்த அஞ்ஞானிகள் பாவ மன்னிப்பின் சுவிசேஷத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் ஆவிகளின் உலகத்தையும் இருளின் அதிகாரத்தையும்பற்றிய பயத்தால் வேட்டையாடப்பட்டு, இழுத்துச்செல்லப்பட்டு, பெரும்பாலும் மீண்டும் சிறைப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பிதாக்களின் பாரம்பரியங்களை உடைத்தெறிந்துவிட்டார்கள். எனவே, அதனால் ஏற்படும் விளைவுகளைக்குறித்துப் பயப்படுகிறார்கள். "மனந்திரும்பியவர்கள்," ஆவிகளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற ஆசையினால் அசுத்த ஆவிகளை ஆராதிப்பதற்கே மீண்டும் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். இயேசுவின் சுவிசேஷத்தைப்பற்றிய சகல மகிமையையும் நம்மால் அவர்களுக்கு அறிவிக்க முடிந்தால், அவர்களுக்கு மன்னிப்பை மட்டும் வழங்குவதற்குப்பதிலாக இராஜ்ஜியத்தை வழங்க முடிந்தால், "இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு,

அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்படுவதின்" நிஜத்தைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்களுடைய மனதில் பதிய வைத்தால், விளைவுகள் எவ்வளவு வித்தியாசமாக இருக்கும்! ஒருவேளை மனந் திரும்புபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். ஆனால், மனந் திரும்புபவர்கள் இருண்ட மண்டலத்திலிருந்து உண்மையான விடுதலையை அனுபவிப்பார்கள். மேற்கத்திய உலகமும் மெய்யாகவே ஓர் அஞ்ஞான உலகமே; அது நாகரிகம் மற்றும் யூத-கிறிஸ்தவ பாரம்பரியம் என்ற ஒரு மெல்லிய மேல்பூச்சினால் மூடப்பட்டிருக்கிறது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இருப் பதைப்போல, இருளின் அதிகாரம் வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும் அதிகமாகவே இருக்கிறது. ஒரே சுவிசேஷம் எல்லா இடங்களிலும் முழுமையாகத் தேவைப்படுகிறது. கிறிஸ்து கல்வாரியில் செய்து முடித்த வேலையின் முழுமையான தாக்கம் மக்களுக்குப்பின்னால் இருக்கும் ஆவிகளின் சேனைகளின்மேல் தாக்கத்தை ஏற்படுத்தாதவரை, அவர்கள் முழுமை யான விடுதலையை ஒருபோதும் அனுபவிக்க மாட்டார்கள்.

எதிரி நம் தலைக்குள் வந்து, நமக்குப் பயத்தை ஏற்படுத்தி நம்மைக் கட்டுப்படுத்த முயல்வது எப்படி இருக்கும் என்று விசுவாசிகளாகிய நமக்குத் தெரியும். இருளின் அதிகாரம் நம்மைப் பொறுத்தவரை மிகவும் நிஜமான ஒரு காரியம். அவனுடைய நெருக்கத்தின்கீழ் நாம் சுருண்டுவிடக்கூடாது. ஆனால், நாம் இயேசுவுக்குச் சொந்தமானவர்களென்றால், அவர் நமக்குள் வாழ்கிறார், கர்த்தராக ஆள்கிறார். சாத்தான் நம் உணர்ச்சிகளைத் தந்திரமாக மாற்ற எவ்வளவுதான் முயன்றாலும் சரி, நாம் இயேசுவுடன் தொடர்ந்துசெல்ல வேண்டும். நம் மனநிலைகள் அல்லது உணர்ச்சிகள் அல்லது நாம் யோசிக்கும் விதங்கள் மாறும்போது தேவன் மாறுவ தில்லை. நம் வாழ்க்கை தட்பவெப்ப நிலையைவிட வேகமாக மாற முடியும். ஆனால், **பரலோகம் ஆளுகைசெய்கிறது**; அது மாறாது, மாறாதது. இயேசு "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." அவர் எனக்குள் வாழ்கிறார் என்றால், எனக்குள் தங்க வந்திருக்கிறார் என்று பொருள். உண்மைகளின்மேல் நின்றுகொண்டு, அவரை விசுவாசிப்பதின்மூலம் வெற்றி வருகிறது. இயேசு எல்லாருக்கும் கர்த்தர். "சகல ஆட்சியாளர்களுக்கும் அதிகாரம்கொண்டோர் களுக்கும் தலை." எதிரி மிக உயர்ந்த இடத்துக்கு உயர்த்தப்படவில்லை. இயேசுவே மிக உயர்ந்த இடத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். நாம் அங்கு அவருடன் நிற்கிறோம்.